RE/MAX REALTRON BLUE FORCE · TEAM BLUE FORCE BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com
AAXEL

மலர்:- 29, 15 யூலை 2022 இதழ்:- 12

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## ஆர்ப்பாட்டக்காரர்களை இரண்டாகப் பிளந்தார் ரணில்!

## ஜனாதிபதி, பிரதமர் செயலகங்களில் இருந்து வெளியேற முடிவு!



தமிழீழ விடுதலைப் புலிகளை பிளந்த ரணிலுக்கு எமது போராட்டத்தையும் பிளப்பது சுலபம் என காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் 12 யூலை 2022 பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றிருந்த நிலையில் 13 யூலை 2022 நாடாளுமன்றத்தை கைப்பற்றுவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருந்தது எனினும் இந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக நாடாளுமன்றத்தை கைப்பற்றும் முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தது. (3ம் பக்கம் பார்க்க)

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போராட்ட வெற்றியின் அடுத்த கட்டம் என்ன?



அறுபத்தியொன்பது இலட்சம் மக்களின் வாக்குகளுடன் அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச அந்த மக்களாலேயே வெறுத்து துரத்தப்பட்டிருக்கின்றார். நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்குரிய சிறப்புரிமை தான் அவருக்குத் தேவையாக இருந்திருக்கின்றது. பாதுகாப்பான ஒரு இடத்தில் குடியேறும் வரையில் தனது பதவி துறப்புக் கடிதத்தை கையளிக்காதிருப்பதற்கும் தீர்மானித்திருக்கின்றார் (19ம்பக்கம்)

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக கோத்தபாயவின் இராஜினாமாக் கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைப்பு!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## பதில் தாக்குதல் நடத்த அனுமதி வழங்குமாறு முப்படையினர் முன் வைத்த கோரிக்கையை நிராகரித்த கட்சித் தலைவர்கள்



போராட்டகாரர்களினால் பாராளுமன்றத் திற்கு தாக்குதல் நடத்தும் பட்சத்தில் பதில் தாக்குதலை நடத்த அனுமதி வழங்குமாறு முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் முன் வைத்த கோரிக்கையை கட்சி தலைவர்கள் நிராகரித்துள்ளனர். (7ம் பக்கம்)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!

## உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial




## Team SIVA WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Central Park / Bramalea

**Brampton** 674,900
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Park Rd / Wentworth

**Oshawa** $499,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Well Maintained Complex


### Kennedy & Progress


**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Mccowan/401

**Scarborough** $589,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Newly Renovated ,Open Concept

### Kennedy/401

**Scarborough** $599,900
Bedrooms: 1 Washrooms: 1
Close To High Way, Shopping Plaza


### Dixie/Clark

**Brampton** $629,900
Bedrooms: 3 Washrooms: 2
Upgraded & Spacious Corner Unit

### Eglinton/Markham

**Scarborough** $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated & Low Maintenance Free

### Yonge/Davis

**Newmarket** $1,699,000
Bedrooms:4+1 Washrooms: 5
Over 4000 Sq Ft

### Hwy 7/ Leslie

**Markham** $649,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Open Concept, Newer Paint

### Don Mills/Eglinton



**Scarborough** $549,900
Bedrooms: 3 Washrooms: 2
Location! Location! Location!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### Brimorton/ Scar. Golf


**Scarborough** $1,100
Bedrooms: 1 Washrooms: 1
Basement Apartment for Rent

### Major Mack/Mccowan


**Markham** $2,900
Bedrooms: 4 Washrooms: 3
Throughout Hardwood Floor

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன் கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca**
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆர்ப்பாட்டக்காரர்களை இரண்டாகப் பிளந்தார் ரணில்!
## ஜனாதிபதி, பிரதமர் செயலகங்களில் இருந்து வெளியேற முடிவு!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்த நிலையில் 13 யூலை 2022 இரவு காலி முகத்திடல் பகுதியில் இருந்து கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் நாட்டு மக்களுக்கு முக்கிய அறிவுறுத்தலொன்றை வழங்கியுள்ளனர். அதன்படி நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று இடம் பெற்ற ஆர்ப்பாட்டங்களில் காலிமுகத் திடல் போராட்டக்காரர்கள் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நாடாளுமன்ற முற்றுகை போராட்டம் தொடர்பில் கேள்விப் பட்டதும் அதில் பொதுமக்களை கலந்து கொள்ள வேண்டாமென கேட்டுக் கொண்டதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மேலும் கூறுகையில், நாடாளுமன்றத்தையும் ஆக்கிரமித்து, அரசியலமைப்பு மூலமாக எமக்கு தீர்வு தரும் கடைசி அமைப்பையும் அழிக்க வேண்டாம். ஏற்கனவே போராட்டக்காரர்கள், ஆக்கிரமிக்க வேண்டிய ஜனாதிபதி மற்றும் பிரதமர் செயலகங்களை ஆக்கிரமித்து விட்டோம். அவ்வேளைகளில் ஒரு உயிர் சேதமும் ஏற்படவில்லை.

அதாவது அவ்வேளைகளில் இராணுவம் சுடவில்லை. ஆனால், இப்போது சுடலாம். பெதும் கேர்னர் என்ற நபர் காலி முக போராட்டத்தில் நுழைந்து நாடாளுமன்றத்தை பிடி என்ற தவறான வழிகாட்டலை தருகிறார்.

இதன் மூலம் போராட்டத்தில் பிளவு வருகிறது. 'தமிழீழ விடுதலைப் புலிகளை பிளந்த ரணிலுக்கு இந்த போராட்டத்தையும் பிளப்பது சுலபம். மேலும், நாடாளுமன்றத்தில், சபாநாயகர் இல்லத்தில் கை வைத்தால் சர்வதேசம் எம்மை நிராகரிக்கும். ஏற்கனவே எமக்கு ஆதரவாக இருந்த சட்டத்தரணிகள் சங்கமும் இப்போது எம்மை விமர்சிக்கிறது என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகத்திலிருந்து உடனடியாக வெளியேற காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் தீர்மானித்துள்ளனர். போராட்டம் வேறு வகையில் திசை திரும்புவதனை தவிர்க்க வேண்டும் என ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



காலி முகத்திடலில் ஆர்ப்பாட்ட ஏற்பாட்டாளர்கள் ஊடவியலாளர் சந்திப்பு ஒன்றை சற்று முன்னர் நடத்திய நிலையில் இந்த அறிவிப்பை வெளியிட்டனர். காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் நாடாளுமன்றம் மற்றும் சபாநாயகர் இல்லத்தை சுற்றி வளைக்க வேண்டாம் என கேட்டுக் கொண்டுள்ள நிலையில் அங்கு சென்ற ஒரு குழுவினரால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

எனினும் இவ்வாறு தொடர்ந்தால் நாட்டின் நிலைமை மிகவும் பயங்கரமானதாக மாறி விடும். எனவே தாங்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியேறுவதாக குறிப்பிட்டுள்ளனர். இது ஒரு சமாதானமான போராட்டமாக காணப்பட வேண்டும். வன்முறை எங்கள் நோக்கமல்ல. எனினும் கோட்டாபய மற்றும் ரணிலை விரட்டும் வரை எங்கள் போராட்டம் முடிவுக்கு வராதென ஆர்ப்பாட்ட ஏற்பட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# கோத்தபாயவுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்க பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள்!



இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக சர்வதேச பிடியாணையை பிறப்பிக்கவேண்டும் என பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லிபரல் ஜனநாயக கட்சியின் தலைவர் சேர் எட் டேவி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். கோத்தபாய ராஜபக்சவையும் அவரது குழுவினரையும் கைது செய்வதற்கான சர்வதேச பிடியாணையை பிறப்பிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் மிகமோசமான நிலைக்கு ராஜபக்ச அரசாங்கத்தின் ஊழலும் வரிச்சலுகையும் மிகவும் அதிகமான பாதுகாப்பு செலவீனங்களும் பொலிஸாருக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களுமே காரணம் என அவர் பிரிட்டனின் பொதுச்சபையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஜனநாயகவாதிகளிற்கு ஆதரவளிப்பதற்காக இலங்கைக்கு முழுமையான பொருளாதார அரசியல் தீர்வை வழங்குவதற்காக பிரிட்டன் சர்வதேச சகாக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


சர்வதேச நாணயநிதியம் மற்றும் ஏனையவர்களுடன் இணைந்து நாங்கள் உடனடி ஆதரவை ஆரம்பிக்க வேண்டும், அதில் கோத்தபாய ராஜபக்சவையும் அவரது சகாக்களையும் கைதுசெய்யும் சர்வதேச பிடியாணை உட்பட அரசியல் விடயங்களை உள்ளடக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் பொதியில் தமிழர்கள் முஸ்லீம்கள் உட்பட அனைவரினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை உள்ளடக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# கோத்தா சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதி

நாட்டில் இருந்து மாலைதீவுக்கு சென்ற ஜனாதிபதி கோட்டாபய அங்கிருந்து நேற்று சிங்கப்பூரில் தரையிறங்கியுள்ளார். கடந்த 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு மக்கள் மேற்கொண்ட போராட்டத்தையடுத்து நாட்டில் இருந்த வெளியேறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் மாலைதீவில் இருந்து சிங்கப்பூருக்கு சென்றுள்ள ஜனாதிபதிக்கு அங்கு உள்நுழைய அனுமதியளித்துள்ளதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனிப்பட்ட பயணமாக வந்துள்ள நிலையில் அவர் சிங்கப்பூருக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் தஞ்சம் கோரவில்லை. அவருக்கு எந்த அடைக்கலமும் வழங்கப்படவில்லை. சிங்கப்பூர் பொதுவாக புகலிடக் கோரிக்கைகளை ஏற்பதில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை சிங்கப்பூரின் சங்கி விமான நிலையத்தின் வாசலில் ஊடகவியலாளர்கள் பலர் காத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**


# பதவி விலகாமல் இராணுவ விமானம் மூலம் மாலைதீவுக்குத் தப்பியோடிய கோத்தபாயா அங்கிருந்து சிங்கப்பூர் பறந்தார்! அங்கிருந்து எங்கே போவார்?



கொழும்பு, ஜீலை 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 12 யூலை 2022 செவ்வாய்க்கிழமை அதிகாலை இராணுவ விமானம் ஒன்றில் நாட்டை விட்டுத் தப்பியோடி மாலைதீவு சென்றடைந்தார். அங்கிருந்து மறுநாள் புதன்கிழமை அவர் சிங்கப்பூருக்கு பயணமானார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதிக்கு கோட்டாபயவுக்கு எதிராக பெரும் மக்கள் போராட்டம் வெடித்துள்ள நிலையில் அவர் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார்.

மாலைதீவின் தலைநகரான மாலேயில் உள்ளூர் நேரப்படி அதிகாலை 03:00 மணிக்கு அவர் பயணித்த இராணுவ விமானம் தரையிறங்கியது. அங்கிருந்து பலத்த பாதுகாப்புடன் பிறிதொரு இடத்துக்கு கோட்டாபய சென்றுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷ 13 யூலை 2022 புதன்கிழமை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ள நிலையிலேயே உத்தியோகபூர்வ பதவி விலகல் அறிவிப்புக்கு முன் ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தை மக்கள் முற்றுகையிட்டதை அடுத்து அவர் தலைமறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அமெரிக்கா செல்ல கோட்டாபய முயன்ற நிலையில் அவருக்கு விசா நிராகரிக்கப்பட்டது. அதேவேளை, அவர் மாலைதீவில் இருந்து சிங்கப்பூர் நோக்கி விமானத்தில் பயணித்தார் என்றும் தெரியவந்தது. அவர் சில தினங்களில் டுபாய் செல்ல திட்டமிட்டுள்ளார். டுபாயில் அவர் தங்கும் பாதுகாப்பான இடத்தை, ஏற்கனவே அரச உளவுச் சேவை பிரதானி மேஜர் ஜெனரால் சுரேஷ் சலே ஏற்பாடு செய்துவிட்டு கடந்தவாரம் திரும்பியதாக உள்ளூர் ஊடகங்கள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக பிரதமர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் பிரதமரின் ஊடகப்பிரிவு ஊடகங்களுக்கு குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது.

அதில் கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னதாக தாம் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு விமானம் ஒன்றை வழங்கியதை இலங்கையின் வான்படை உறுதிப்படுத்தியிருந்தது. புதன் கிழமை அதிகாலை ஜனாதிபதியும் அவரது பாரியாரும்,இரண்டு பாதுகாப்பு அதிகாரிகளுடன் மாலைதீவுக்கு சென்றதாக சர்வதேச ஊடகங்கள் அறிவித்திருந்தன. பின்னர் அவர் மாலைதீவில் தரையிறங்கியமையையும் சர்வதேச ஊடகங்கள் உறுதிப்படுத்தியிருந்தன.

இதேவேளை மாலைதீவு சென்றடைந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுமாறு கோரி மாலைதீவு ஜனாதிபதி அலுவலகம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இலங்கையை சேர்ந்தவர்களும் மாலைதீவைச் சேர்ந்தவர்களும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவு அரசாங்கம் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு பாதுகாப்பான புகலிடத்தை வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அங்குள்ள இலங்கையர்கள் அன்புக்குரிய மாலைதீவு நண்பர்களே குற்றவாளிகைளை பாதுகாக்க வேண்டாமென உங்கள் அரசாங்கத்திற்கு வலியுறுத்துங்கள் என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜீலை 12 ஆம் திகதி வரை கோட்டா நாட்டிலிருந்து வெளியேற எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், 12 யூலை 2022 இரவு விஷேட தகவல் ஒன்றினை அரசாங்கத்துக்கும் பிரதமருக்கும் அனுப்பியுள்ள கோட்டாபய ராஜபக்ஷ, தான் நாட்டிலிருந்து பாதுகாப்பாக வெளியேறும் வரை பதவியில் இருந்து விலகப் போவதில்லை என கூறியுள்ளார். இதனையடுத்தே மாலைத்தீவுக்கு தப்பிச் செல்வதற்கான வசதிகளை பிரதமர் (பதில் ஜனாதிபதி தற்போது) ரணில் தலைமையிலான அரசாங்கம் செய்து கொடுத்துள்ளது.

அதன்படியே பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின் பின்னர், விமானப்படை தளபதி (கோட்டாவுக்கு மிக நெருக்கமானவர் ) எயா மார்ஷல் சுதர்ஷன பத்திரவின் கட்டளைக்கு அமைய குறூப் கெப்டன் வெலகெதர விங் கொமாண்டர் மல்லவ ஆரச்சி ஆகிய விமானிகள் என்டனோ 32 ரக விமானத்தை செலுத்த கோட்டா மாலைத்தீவு நோக்கி தப்பிச் சென்றார்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# இலங்கை லெபனானாக மாறிக் கொண்டிருக்கிறதா?



கோட்டா கோ ஹோம் போராட்டக்காரர்கள் தமது இலக்கை அடைந்து விட்டனர். கோட்டா வீட்டுக்கு போய் விட்டார். இனி அவர் திரும்ப வரப் போவதில்லை. அடுத்து என்ன என்பதை இனி யாரும் சொல்ல வேண்டியதில்லை.

கோட்டாவின் வீட்டை முற்றுகையிட்டவர்கள் ஒரு லட்சமோ அல்லது அதையும் விட சற்றுக் கூடியதாகவே கூட இருக்கலாம். ஆனால், அந்த முற்றுகையில் கலந்துகொண்டவர்கள் எல்லோரும் இந்த போராட்டக்காரர்கள் என்று அறிவிக்கப்படுபவர்களின் ஆதரவாளர்களோ அல்லது அவர்களின் கொள்கையை நம்புபவர்களோ அல்ல. அவர்களும் கோட்டா போக வேண்டும் என்று விரும்பியவர்கள் அவ்வளவு தான்.

அதற்காக அந்த காலிமுகத்திடலில் போராட்டத்தை ஒழுங்கமைத்த அந்த ஒரு சிலர் மாத்திரம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகின்றார்களா? ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் மட்டும் இந்த நாட்டை இன்றைய நிலைக்கு கொண்டுவந்துவிடவில்லை. இதுவரை தொடர்ந்து ஆட்சியிலிருந்தவர்கள் செய்த தவறுகளும் தான் அதற்கு காரணம். ஆனால் அதில் பெரிதாக தவறு செய்தவர் யார்? சிறிதாக தவறு செய்தவர் யார்? என்பது எல்லாம் இன்று அவசியமற்றது.

ஆனால், ராஜபக்ச குடும்பம் செய்த தவறுகளை மன்னிக்க முடியாததாக மக்கள் கருதியதாலேயே அவர்களுக்கு எதிராக இவ்வாறு கிளர்ந்தெழுந்தனர். அவர்கள் சகாப்தம் முடிந்து விட்டது என்று நாம் நம்ப வேண்டும் என்றால், இனிவரும் காலங்களில் நடக்கின்ற சம்பவங்கள், நாடு பயணிக்கப் போகின்ற பாதை எப்படி இருக்கப் போகின்றது என்பதிலேயே அவர்களின் மீள் வருகையும் தீர்மானிப்படும்.

நாட்டுமக்கள் அனைவரின் மனங்களும் பெற்றோலாக' மாறியிருக்க, ஒருவர் தீயை மூட்டினால் அது பற்றி எரியவே செய்யும். அதற்காக அந்த தீயை மூட்டியவர், இனி என்ன செய்யவேண்டும் என்பதையும் நானே தீர்மானிக்கப் போகின்றேன் என்றால் அதற்கு இது மன்னராட்சிக்குரிய நாடல்ல. இது ஒரு ஜனநாயக நாடு.

அந்தப் போராட்டக்காரர்களிடம் இனி எப்படி நாட்டை வழி நடத்தவேண்டும் என்ற திட்டம் இருந்தால் அதனை மக்கள் மத்தியில் வைத்து ஒரு ஜனநாயக வழிமுறையில் ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்க வேண்டுமே தவிர, இப்போதே எமது அரசியலமைப்பு சட்டத்திற்கு விரோதமாக தாம் விரும்பியதைத் தான் செய்ய வேண்டும் என்று அடம்பிடிப்பதை அனுமதிக்கப் போகின்றோமா?

ஜனாதிபதி கோட்டாபய, தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். இன்று அவர் தனது பதவியை ராஜினாமாச் செய்வார் என்று சபாநாயகரிடம் தெரிவித்திருந்ததாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் அவரோ இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் வரை பதவி விலகலுக்கான கடிதத்தை சபாநாயகருக்கு அனுப்பவில்லை.

மாறாக இப்படியொரு கடிதத்தை 13 யூலை 2022 புதன்கிழமை சபாநாயகருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இயலாதிருப்பதாக கருதுவதால், நான் இலங்கையில் இல்லாத இவ்வேளையில், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பிரதமரான கௌரவ ரணில் விக்கிரமசிங்கவை 2022 ஜீலை 13ஆம் திகதியிலிருந்து ஜனாதிபதியின் அதிகாரங்களையும், கடமைகளையும், நடவடிக்கைகளையும் நிறைவேற்றவும், நிகழ்த்தவும், செயல்படுத்தவும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 37 (1) பிரிவின் கீழ், நான் இலங்கையில் இல்லாத அக் காலப்பகுதிக்கு நான் இத்தால் நியமிக்கிறேன் என்பதை இதன் மூலம் நான் தெரியப்படுத்துகின்றேன்.'

இதுவே ஜனாதிபதி அனுப்பிய கடிதம். அதன் பின்னர் பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பெறுப்பேற்றிருக்கிறார். இந்நிலையிலேயே ரணிலுக்கு எதிராகவும் போராட்டக்காரர்கள் இப்போது தமது போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

கோட்டா கோ ஹோம் போராட்டத்தை தொடக்கியவர்களில் இரண்டு இடதுசாரி கட்சிகளின் பின்புலம் என்பது இரகசியமானதல்ல. அந்த இரண்டு கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இப்போது தத்தமக்குள் மோதத் தொடங்கியிருக்கின்றனர்.

அலரிமாளிகையை கைப்பற்றி அங்கே இருப்பவர்களிடையே குளிரூட்டப்பட்ட அறை ஒன்றை யார் பயன்படுத்துவது என்பதில் மோதல் ஏற்பட்டு பலர் காயமடைய நேர்ந்ததாக நேற்று முன்தினம் செய்திகள் வந்தன. இப்போது காலிமுகத்திடலிலும் அதே போன்றதொரு குழு மோதல் இடம்பெற்றிருக்கின்றது. இவர்களே இப்போது நாட்டில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை இடுகின்றார்கள்.

பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் யார் அடுத்த ஜனாதிபதி, யார் பிரதமர் என்பதில் முட்டிமோதிக் கொண்டிருக்கிறார்கள். நாடு ஒரு லெபனானாக மாறிக் கொண்டிருக்கின்றதா என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடியவில்லை.!நன்றி:- யாழ்ப்பாண ஈழநாடு

## ராஜபக்ஷ சகாப்தம்?

சில ஆபிரிக்க நாடுகளில் இடம் பெற்ற காட்சிகளை, இப்போது இலங்கைத்தீவில் காண்கின்றோம். நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் – நான் தான்நீங்கள் தேடிய தலைவன் என்று எக்காளமிட்ட கோட்டபாய ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் கைப்பற்றியிருக்கின்றனர். ஜனாதிபதி மாளிகையின் படுக்கையறை, நீச்சல் தடாகம் ஆகியவற்றை போராட்டக்காரர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் புகைபட்டங்கள் சர்வதேச ஊடகங்களில் பிரதான இடத்தை பிடித்திருக்கின்றன.

சில வருடங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பதுங்கு குழிகள் மற்றும் அங்குள்ள வசதிகளை சிங்கள மக்களுக்கு காட்சிப்படுத்தி, தங்களின் அதிகாரத்தை பலப்படுத்திக் கொள்ள முற்பட்டவர்கள், இப்போது ஆர்பாட்டக்காரர்களுக்கு அஞ்சி மறைந்து ஓடும் காட்சிகளை அதே சிங்கள மக்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதிகாரத்தின் உச்சத்திலிருக்கும் போது தங்களது அதிகாரத்தின் எல்லைகள் தெரியாமல் மமதை கொள்பவர்கள் பலரது நிலைமை இப்படித்தான் முடிந்திருக்கின்றது. அது இப்போது ராஜபக்ஷக்களுக்கும் நடந்திருக்கின்றது.

நாட்டை முன்நோக்கி வழிநடத்துவதற்கான எந்தவொரு உருப்படியான திட்டங்களையும் கொண்டிருக்காமல், வெறுமனே, சிங்கள இனவாதத்தின் மூலம் நீண்ட காலத்திற்கு ஆட்சியிலிருப்பதற்கான கனவையே ராஜபக்ஷக்கள் கொண்டிருந்தனர். மகிந்த விதைத்த இனவாதத்தை, கோட்டபாய ராஜபக்ஷ அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லமுற்பட்டார். ஆனால் அடிப்படையில் மகிந்த எதைச் செய்தாரோ அதனையே கோட்டபாய ராஜபக்சவும் செய்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டத்தில், 70 விகித்திற்கு மேற்பட்ட தொகையை அவரது குடும்ப உறுப்பினர்கள் பிரதிநித்துவம் செய்த அமைச்சுக்களும், அரச நிறுவனங்களாலுமே கட்டுப்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்த சிறிலங்காவே, ராஜபக்ஷ குடும்பத்தினுடையது போன்றே காட்சியளித்தது. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள், மறுபுறமாக, அரசர்கள் போன்றே செயற்பட்டனர். இதன் விளைவாக, ஆதரித்த மக்களே, இப்போது வெறுத்து துரத்துகின்றனர். ஜனநாயக அரசியல் என்பது மக்களுக்கு பொறுப்புச் சொல்லும் ஓர் அரசியலாகும். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் ஏனைய இனங்கள் தொடர்பிலிருக்கும் அச்சங்களை, ஒவ்வொரு சிங்கள ஆட்சியாளர்களும் தங்களின் அதிகார பசியை போக்குவதற்காக பயன்படுத்திக் கொண்டனர்.

ராஜபக்ஷக்கள் இதனை உச்சக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றனர். இதன் எல்லாக் காலத்திலும் தங்களது அரசியல் சீவியத்தை தக்க வைக்க முடியுமென்பதே அவர்களது நம்பிக்கையாக இருந்தது. கோட்டபாய ராஜபக்ஷ 69 லட்சம் மக்களின் ஆதரவில் வெற்றி பெற்றதை தொடர்ந்து, சிங்கள பௌத்தத்தின் காவலனாக தன்னை முன்னிறுத்திக் கொண்டால் தொடர்ந்தும் ஆட்சியிருக்கலாம் என்பதே கோட்டபாயவின் அரசியல் கணக்காக இருந்தது. இப்போது அவமானகரமான தோல்வியை சந்தித்திருக்கின்றார். இதில் ரணில் விக்கிரமசிங்கவும் தோல்வியடைந்திருக்கின்றார். ஆனால் ஓர் ஆசனத்தில் பிரதமரானவர் என்னும் வகையில் அவரை பொறுத்தவரையில் இது பெரிய தோல்வியல்ல.

ஏனெனில் அவர் ஏற்கனவே தோல்விடைந்திருந்த ஒருவர் தான். அதிகார மமதையில் தலை கால் புரியாமல் செயற்படும் ஆட்சியாளர்கள் அனைவருக்கும் இது ஒரு படிப்பினை. அதே வேளை, மக்கள் எழுச்சி கொணடால், அதிகாரத்திலிருப்பவர்கள் அடங்கித் தானாக வேண்டும் என்பதற்கும் இது ஒரு நல்ல உதாரணமாகும். ஜனாதிபதி செயலகம் போராட்டக்காரர்களினால் முற்றுகையிடப்பட்டதை தொடர்ந்து ராஜபக்ஷசகாப்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ராஜபக்ஷக்கள் தந்திரங்கள் செய்யும் காலமும் முடிந்துவிட்டது. இனி எத்தகைய தந்திரங்கள் செய்தாலும் பயனில்லை. அதே வேளை, மக்களதிகாரத்தை கையிலெடுக்க வேண்டுமென்று எண்ணுபவர்கள் உத்வேகம் பெற்றிருக்கின்றனர்.

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE
Phone : 416-289-9229

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



39 Devonshire Ave- Markham ON- L3S 3P2

# இராணுவம் முழுப் பலத்தை பயன்படுத்த தயார் நிலையில்? புத்திசாலித்தனமாகப் பின்வாங்கிய போராட்டக்காரர்கள்!

அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலும் வன்முறையைத் தூண்டும் வகையிலும் செயற்படுவதை ஆர்ப்பாட்டக்காரர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறில்லை நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு பாதுகாப்பு படையினருக்கு முழுமையான அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும் என்று இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளத் தொடர்ந்து காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் புத்திசாலித்தனமாக தாம் கைப்பற்றிய அரச கட்டிடங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். இதனால் தென்னிலங்கையில் ஏற்பட இருந்த மகிப்பெரிய இரத்தக்களரி தடுக்கப்பட்டதாக கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.



இராணுவ தலைமையகத்தினால் 14 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்ட விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

கடந்த 9 ஆம் திகதி கொழும்பு கோட்டையில் இடம் பெற்ற மக்கள் போராட்டம் உட்பட, பாதுகாப்புப் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம் பெற்ற சிறு சிறு வன்முறைச் சம்பவங்களைத் தவிர, அக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சட்ட மீறல்களோ கடுமையான வன்முறைகளோ இடம்பெறவில்லை.

பாதுகாப்பு பதவிநிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்டோர் பல சந்தர்ப்பங்களில் அமைதியைப் பேணுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கேட்டுக் கொண்டனர். அத்தோடு அரச கட்டடங்கள் உள்ளிட்ட சகல கட்டடங்களையும் பாதுகாக்குமாறும் வலியுறுத்தினர்.

கடந்த 72 மணித்தியாலங்களுக்குள் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , சபாநாயகர் மற்றும் கட்சி தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பில் பாதுகாப்பு பதவி நிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா முப்படை தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் கலந்து கொண்டதோடு நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

இதன் போது அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறை சம்பவங்களுடன் தொடர்புபடாமல் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்காத வரையில் உச்சபட்ச அதிகாரத்தை பயன்படுத்தாமல் குறைந்த பட்ச அதிகாரங்களை பயன்படுத்தி அவர்களை கட்டுப்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், அமைதியான போராட்டக்காரர்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக, துரதிர்ஷ்டவசமாக அகிம்சை' அணுகுமுறையை விட்டு அந்த ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு குழு சட்டம் ஒழுங்கை உடைத்து, சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தில் வன்முறையாக செயற்பட்டது.

அது மாத்திரமின்றி நாட்டில் மக்கள் இறையாண்மை மற்றும் அரசியலமைப்புச் சட்டப்படி வழங்கப்பட்டுள்ள ஜனநாயக விழுமியங்களை நடைமுறைப் படுத்தக்கூடிய ஒரே இடமான பாராளுமன்ற வளாகத்தைக் கைப்பற்றும் நோக்கில் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு தரப்பினரின் வீதித் தடைகள் போன்றவற்றை இடித்துத் தகர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்த இராணுவ வீரர்கள் மீது கடும் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டதோடு அவர்களது துப்பாக்கியும் சூரையாடப்பட்டன. இதனால் படுகாயமடைந்த இராணு வீரர்கள் கவலைக்கிடமான நிலைமையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பதிலுக்கு இராணுவத்தினர் குறைந்த பலத்தினை பிரயோகித்து வான் நோக்கி பல துப்பாக்கிச் சூடுகளை நடாத்தியதுடன் இராணுவ வீரர்களுக்கும் பொலிஸாருக்கும் தீங்கு விளைவிக்கும் வகையில் மற்றவர்களையும் தூண்டிக் கொண்டிருந்த சில கட்டுக் கடங்காத வன்முறை பிரிவினரை தடுத்து நிறுத்தினர்.

எவ்வாறாயினும், பொலிஸாருடன் இராணுவத்தினர் இணைந்து புதன்கிழமை இரவு வரை குறைந்த பட்ச பலத்தினை பிரயோகித்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் குறித்த வன்முறை பிரிவினரை கலைத்து பாராளுமன்றத்திற்கான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

வன்முறைச் செயல்கள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, ஆயுதப் படைகள் அல்லது பொதுச் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்தில் உள்ள போராட்டக்காரர்களை அனைத்து வகையான வன்முறைகளில் இருந்தும் உடனடியாக விலகிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் பொதுச் சொத்துக்கள், முக்கிய நிறுவனங்கள் மற்றும் மனித உயிர்களுக்கு பாதுகாப்பு தேவை என கருதினால், அவைகளை பாதுகாக்கும் பொருட்டு, ஆயுதப் படை உறுப்பினர்கள் தங்கள் பலத்தினை பிரயோகிக்க சட்டப்பூர்வமாக அங்கிகாரம் பெற்றுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# பதில் தாக்குதல் நடத்த அனுமதி வழங்குமாறு முப்படையினர் முன் வைத்த கோரிக்கையை நிராகரித்த கட்சித் தலைவர்கள்



போராட்டகாரர்களினால் பாராளுமன்றத்திற்கு தாக்குதல் நடத்தும் பட்சத்தில் பதில் தாக்குதலை நடத்த அனுமதி வழங்குமாறு முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் முன் வைத்த கோரிக்கையை கட்சி தலைவர்கள் நிராகரித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினால் தற்போதைய அமைதியற்ற நிலைக்கு ஆரம்பக் கட்ட தீர்வினை எட்ட முடியும். அவர் பதவி விலகினால் பதில் ஜனாதிபதியாக சபாநாயகரை நியமித்து அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்தலாம் என கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

சபாநாயகர் மஹிந்தயாப்பா தலைமையில் 13 ஆம் திகதி புதன்கிழிமை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் விசேட கட்சி தலைவர் கூட்டம் இடம்பெற்றது.

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி விலகுமாறு நாட்டு மக்கள் ஓரணியாக வலியுறுத்தும் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதியாக பதவியேற்றுள்ளமை முற்றிலும் தவறானதொரு செயற்பாடாகும். ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியதை தொடர்ந்து மக்கள் சற்று அமைதி காத்தார்கள்.

பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதை தொடர்ந்து மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்பை கருத்திற் கொண்டாவது ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என கம்யூனிச கட்சியின் பதில் தலைவர் வீரசிங்க வீரசுமன வலியுறுத்தியுள்ளார்.

கட்சி தலைவர் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர்,மற்றும் முப்படைகளின் தளபதிகள் கலந்து கொண்டுள்ளனர். நாட்டின் தற்போதைய நெருக்கடியான நிலைமையினை கருத்திற் கொண்டு பதவி விலகுமாறு தாம் பதில் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாக கட்சி தலைவர் கூட்டத்தில் முப்படைகளின் தளபதிகள் குறிப்பிட்டதாக எதிர் தரப்பின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டகாரர்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிடும் நோக்கில் தாக்குதல்களை மேற்கொண்டால் நிலைமையினை கட்டுப்படுத்த எதிர்தாக்குதலை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறு முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் விடுத்த கோரிக்கையை கட்சி தலைவர்கள் மறுத்துள்ளனர்.

அரசியமைப்பிற்கு முரணாக அரசாங்கம் முன்னெடுக்கும் தீர்மானங்களுக்கு பாதுகாப்பு தரப்பினர் ஒத்துழைப்பு வழங்க கூடாது.நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கும் பொறுப்பு முப்படையினருக்கும் உண்டு என கட்சி தலைவர் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கட்சி தலைவர் கூட்டத்தில் கலந்து. கொள்ளவில்லை. தற்போதைய நிலைமைக்கு ஒரே தீர்வு பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் எனவும் லக்ஷமன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவி விலகியதை தொடர்ந்து பதில் ஜனாதிபதியாக சபாநாயகரை நியமித்து அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து அவதானம் செலுத்த முடியும் என கட்சி தலைவர் கூட்டத்தில் யோசனை முன் வைக்கப்பட்டது. கடந்த 11ஆம் திகதி கட்சி தலைவர் கூட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துமாறு சபாநாயகருக்கு வலியுறுத்தப் பட்டது.

# தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதத் தலைவர்கள் கூட்டாக விடுத்துள்ள கோரிக்கை



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் தமிழ்மக்களின் பிரச்சினைகளை முன் வைபப்தற்கு அனைத்து தமிழ் பாராளுமன்றப் உறுப்பினர்களும் கட்சி தலைவர்களும் ஒன்று கூடி தீர்க்கமான முடிவெடுக்க வாருங்கள் என மதத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளார்கள்

நல்லை ஆதீனத்தில் 13 ஆம் திகதி புதன் கிழமை இடம் பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே சமயத்தலைவர்கள் கூட்டாக வலியுறுத்தினர். குறித்த விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

சகல தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் கட்சி தலைமைகளும் விரைவாக ஒன்று கூடி இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார சூழலில் எடுக்கவேண்டிய தீர்மானம் என்ன என்பதை சீராகத் தீர்மானிப்பதற்கு முன் வரவேண்டும்.

வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என்ற பேதமின்றி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ,கட்சித் தலைவர்கள் வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்காக ஒன்று கூட வேண்டிய தருணம் இது. எனவே அறிவுபூர்வமாக தீர்க்க தரிசனத்தோடு ஒன்றுகூடி ஆராயுங்கள். இது காலத்தின் கட்டாயம்.

இவ்வேளை நீங்கள் ஒன்றுகூடி ஆராய மறுப்பீர்கள் ஆனால் அது மாபெரும் வரலாற்றுத் தவறாகும். இன்று கொழும்பில் இடம் பெற்று வரும் போராட்டத்தை போல் இங்கும் நடைபெற மாட்டாது அல்ல எனவே கடமையை ஒன்றிணைந்து நிறைவேற்ற ஒன்றிணையுங்கள்.

பொருளாதார பிரச்சினை அரசியல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள போதும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ கட்சிகளாகவோ நீங்கள் ஒன்றுபட்டு என்ன நடக்கிறது என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தவில்லை அது மட்டுமன்றி பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு ஆக்கபூர்வமான கோரிக்கைகளோ நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை என்பது மக்களின் குற்றச் சாட்டாகவே உள்ளது இதுவே உண்மையாகவும் உள்ளது

எனவே இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் கட்சி தலைமைகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வாருங்கள் இதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொள்ள தாயாராக இருக்கின்றோம் என்றார்கள்

இவ் ஊடக சந்திப்பில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், யாழ் மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், ரிஷி தொண்டு நாத சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.


Canadian Thunnalai - Karavai People's Association
கனடா வாழ் துன்னாலை - கரவை மக்கள் மன்றம்
43 Fairty Dr. Markham, Ontario L3S 3A6
Tel: 4-416-18-0477 6/47-7034674 Fax: 64476-4014
Email: viveinvk@gmail.com

President
M. Karunainathan
Vice President
V. Mahendram
Secretary
T. Thiruchchelvan
Asst. Secretary
V. Ravindraraj
Treasurer
S. Satkunam
Auditor
V. Sathiyaraj
Executive Members
Vel Vivekananthan
R. Amirthalingam
V. Yoganantham
K. Kamalanathan
N. Sivalingam
V. Premacumar
K. Kantharuban
T. Navaruban
B. Partheepan
R. Kugathas
U. Mowlini
U. Suganja
P. Thamayanthi

அன்புடையீர் ,

கனடா வாழ் துன்னாலை – கரவை மக்கள் மன்றம் நடாத்தும்
25 வது ஆண்டு கோடை கால ஒன்று கூடல் 2022

இடம்: Milliken Park Area
(Middlefield & & Steeles)
5555 Steeles Ave. E, Scarborough, Ontario
காலம்: July 16, 2022 சனிக்கிழமை
நேரம்: காலை 9:00– மாலை 8:30 வரை நடைபெற உள்ளது.

தயவு செய்து இந்த அறிவித்தலை உங்கள் ஊடகத்தில் பிரசுரிக்குமாறு தாழ்மையாக கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477
மு.கருணைநாதன் 647-703-4674

அன்புடன்

மு.கருணைநாதன்
தலைவர்


# இலங்கை நிலவரம்:- ஐ.நா.செயலாளர் தெரிவித்துள்ளது என்ன?

ஆர்ப்பாட்டக்காரர்களின் துயரங்களிற்கும் தீர்வை காண்பது அவசியம் என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார் டுவிட்டர் பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இலங்கை நிலவரத்தை நான் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றேன்

மோதலிற்கான அடிப்படை காரணங்களிற்கும் ஆர்ப்பாட்டக்காரர்களின் துயரங்களிற்கும் தீர்வை காண்பது அவசியம். அமைதியான மற்றும் ஜனநாயக மாற்றத்திற்கான சமரச மனப்பான்மையை ஏற்றுக் கொள்ளுமாறு அனைத்து கட்சி தலைவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.




வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக கோத்தபாயவின் இராஜினாமாக் கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைப்பு



இலங்கை ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதற்கான கடிதத்தை சிங்கப்பூ ரில் உள்ள இலங்கை தூதர் வழியாக சபாநாயகருக்கு அனுப்பி வைத்துள்ளார் கோட்டாபய ராஜபக்ஷ என தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ, மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைத்துள்ள ராஜிநாமா கடிதம் செல்லுபடியாகுமா என்பது குறித்து தற்போது பலரும் பேச ஆரம்பித்துள்ளனர். இலங்கை அரசியலமைப்பில் மின்னஞ்சல் மூலம் ஜனாதிபதி ஒருவர் ராஜிநாமா செய்ய முடியுமா என்பது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டு வருகின்றது. இது குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி பிரதீபா மஹனாமஹேவாவிடம் கேட்ட போது, 2006 இலத்திரனியல் பரிமாற்று சட்டத்தின் 4ஆவதுசரத்துக்கு அமைய இந்த ராஜிநாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்படும்,' என்று கூறினார்.

இதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் ராஜிநாமா கடிதம், சிங்கப்பூரிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஊடாக தமக்கு கிடைத்துள்ளதாக சபாநாயகர் அலுவலகம் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்துள்ளது. இதையடுத்து, கோட்டாபய ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதாக நாம் அழைக்கலாம். இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின்படி அவர் கையெழுத்திட்டு ராஜிநாமா கடிதத்தை அனுப்பியுள்ளார்.

ஆனால் ரணில் விக்ரமசிங்க நாட்டின் பொறுப்பு ஜனாதிபதி ஆக பதவிப்பிரமாணம் செய்து கொள்ளும் வரை அவரை இடைக்கால ஜனாதிபதி ஆக கருத முடியாது. மேலும், ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டால், 30 நாட்களுள்ளாக நாடாளுமன்றத்தில் தனக்கான ஒப்புதலை ரணில் பெற வேண்டியது அவசியம். அந்த ஒப்புதலைப் பெற அவர் தவறினால் புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பை எம்.பிக்கள் நடத்த வேண்டும் என்று கூறுகிறார், கோட்டாபய அனுப்பியுள்ள கடிதத்தின் உண்மைத் தன்மை குறித்து மீண்டும் ஆராய்ந்து, அனைத்து சட்ட நடவடிக்கைகளும் நிறைவு பெற்றதன் பின்னர், அது குறித்து நாளைய தினத்திற்குள் அதிகாரபூர்வமாக அறிவிப்பதாக சபாநாயகர் அலுவலகம் அறிக்கையில் கூறியுள்ளது. முன்னதாக, தாய்நாட்டில் இருந்து மாலத்தீவுக்கு புதன்கிழமை அதிகாலையில் தமது மனைவி, இரண்டு பாதுகாவலர்களுடன் சென்ற கோட்டாபய, வியாழக்கிழமை நண்பகலில் அங்கிருந்து புறப்பட்டு சிங்கப்பூருக்கு உள்ளூர் நேரப்படி இரவு 7.15 மணியளவில் சென்றார். அவர் சிங்கப்பூரில் அடைக்கலம் கேட்பார் என்று அலுவல்பூர்வமற்ற தகவல்கள் வெளிவந்த நிலையில், கோட்டாபய தனிப்பட்ட பயணமாகவே சிங்கப்பூ ருக்கு வந்துள்ளதாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை விளக்கம் அளித்துள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில் சிங்கப்பூருக்கு மருத்துவ சிகிச்சைக்காக வந்துள்ளார். அந்த வகையில் தற்போதைய அவரது பயணமும் அதே நோக்கத்துடனேயே இருக்கலாம் என்றும் அந்த அடிப்படையிலேயே அவர் நாட்டுக்குள் வருவதற்கு சிங்கப்பூர் அரசு அனுமதித்திருக்கலாம் என்றும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன.

சிங்கப்பூர் இலங்கையிலான உடன்பாட்டின்படி இலங்கையர்கள் சிங்கப்பூருக்குள் விசாயின்றி குறுகிய கால பயணத்தை மேற்கொண்டு அதிகபட்சமாக 30 நாட்களுக்கு தங்கியிருக்கலாம். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியே கோட்டாபய சிங்கப்பூருக்கு சென்றுள்ளதாக அறிய முடிகிறது.

முன்னதாக கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூருக்கு வரும் தகவல் பிற்பகலிலேயே உள்ளூர் மக்களுக்கு கிடைத்தது. இதையடுத்து அவரை பார்க்க சிறிய அளவில் விமான நிலையத்தில் இருந்த மக்கள் கூட்டம், நேரம் செல்லச் செல்ல அதிகமானது. வழக்கமாக சிங்கப்பூர் விமான நிலையத்தில் தரையிறங்கிய பிறகு மூன்றாவது முனையத்திலேயே பயணிகளை சௌதி ஏர்லைன்ஸ் விமானம் இறக்கி விடும். ஆனால், இன்று இரண்டாவது முனையத்திலேயே அந்த விமானம் பயணிகளை இறக்கி விட்டது.

இதேவேளை, அவர் சமூக வருகை (சோஷியல் விசா) நுழைவு அனுமதி பெற்று நாட்டுக்குள் வந்துள்ளார் என்று சிங்கப்பூர் காவல்துறை தெரிவித்துள்ளது. கோட்டாபய விவகாரத்தில் நாட்டில் உள்ள சிங்கப்பூர் குடிமக்கள், வேலைக்கான அனுமதி பெற்று பணியாற்றும் வெளிநாட்டினர், சமூக நுழைவு அனுமதி பெற்றவர்கள் அனைவரும் சட்ட விதிகளுக்கு உள்பட்டு செயல்பட வேண்டும் என்றும் விதிகளை மீறி பொது இடத்தில் கூடினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிங்கப்பூர் காவல்துறை எச்சரித்துள்ளது.

இந்த நிலையில் சிங்கப்பூரில் கோட்டாபய எத்தனை நாட்கள் தங்கியிருப்பார், இங்கிருந்து வேறு நாட்டுக்கு செல்வாரா என்பதை கோட்டாபயவோ அவரது தரப்போ தெளிவுபடுத்தவில்லை.




SRI MUTHUMARI AMMAN PRASANNA
ASTROLOGER, PSYCHIC & SPIRITUALIST
Pandit: VISHNU MURTHY
Face Reading, Palm Reading
Horoscope Reading, Date of Birthh



SOLUTIONS & SUGGESTIONS:



Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems




100% Guarantee

Private & Confidential

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போதுகனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்து பார்க்கப்படும் விடயங்கள் கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வதிவிடப் பிரச்சனைகள், வெளிநாட்டுப் பயணங்கள், எதிரிகள் கண்ணூறு நாவூறு, கஸ்டநஸ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண்பிள்ளைகள் பெற்றார் பிரச்சனைகள் இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை என்னை சந்தியுங்கள்.

Specialist in Bringing Back Loved ones

OPEN 7 DAYS
10 AM - 8 PM

Call: 647-390-7388
379 Albion Rd, Unit 1A, Etobicoke, ON, M9W 3P4
Major Intersection: ALBION RD & ELMHURST DR.

# கொழும்பில் வெடித்த வரலாறு காணாத மக்கள் புரட்சி! தப்பியோடிய கோத்தா!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியேற்றுவதற்கான இறுதி மக்கள் போராட்டத்துக்காக கொழும்பில் 09 யூலை 2022 சனிக்கிழமை அலை என திரண்ட மக்கள் வெள்ளமானது, ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டது.

பலத்த பாதுகாப்பையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தையும் ஜனாதிபதி மாளிகைகயையும் முற்றுகையிட்டனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்று திரண்ட போராட்டக்காரர்கள் அரசாங்கத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன் நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டனர்.

பல்லாயிரக் கணக்கானோர் ஜனாதிபதி செயலகத்துக்குள் ஒரே தடவையில் உள் நுழைந்தனர். ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்தவர்கள் பாரிய கோஷத்தை எழுப்பியதுடன் செயலகத்துக்குள் இருக்கும் முக்கிய அறைகளில் இருந்து புகைப்படங்கள் எடுத்து அதனை சமூக வலைத்தளங்களில் வெளியிட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிளைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த போதிலும் பாதுகாப்பையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் உள் நுழைந்தனர். இதன் காரணமாக ஜனாதிபதி மாளிகையானது ஆர்ப்பாட்டக்காரர்களின் வசமானது.

இதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு தரப்பினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலில் பாதுகாப்பு தரப்பினர் உள்ளடங்களாக சுமார் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்கான இறுதி போராட்டம் என்ற தொனிப்பொருளில் ஜூலை 09ஆம் திகதி தலைநகரான கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அந்த ஆர்ப்பாட்டத்தில் மக்கள் வெள்ளம் அலை திரண்டது.

ஆர்ப்பாட்ட பேரணிகள் முடிவுறும் பகுதியாக கொழும்பு காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கம பிரதேசம் அமைந்திருந்ததால் நாட்டின் பல பாகங்களில் இருந்து கொழும்பை நோக்கி வந்த பேரணிகள் அனைத்தும் காலிமுகத்திடலை நோக்கி சென்றன.

இதனால் கோட்டா கோ கம பிரதேசத்தில் மக்கள் வெள்ளம் அலை திரண்டதுடன் கோஷங்களால் காலிமுகதிடல் அமைதியை இழந்தது. காலை 9.00 மணிக்கு பின்னர் கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி ஆர்ப்பாட்டப் பேரணிகள் ஆரம்பமாகின.

மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள், ஆசிரியர்சங்கள், சுகாதார தொழிற் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கங்கள், பஸ் போக்குவரத்தில் ஈடுபடும் தரப்பினர், கலைஞர்கள், விரிவுரையாளர்கள், அரச, தனியார் ஊழியர்கள், சாதாரண பொதுமக்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தாதியர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஆர்ப்பாட்ட பேரணிகளை முன்னெடுத்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்து கொள்வதற்காககண்டி, அனுராதபுரம், காலி, மாத்தறை உள்ளிட்ட வெளி மாவட்டங்களிலிருந்தும் ரயில்களில் வருகை தரப்பினர் கோட்டை புகையிரத நிலையத்தில் ஒன்றுகூடி அங்கிருந்து கோட்டா கோ கமவை நோக்கி பேரணியாக சென்றனர்.

கொள்கலன்கள், சைக்கிள்கள், லொறிகள், மண்அகற்றும் இயந்திரங்கள், நகரசபையின் குப்பை அல்லும் வாகனங்கள் உள்ளிட்ட பல வாகனங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பை நோக்கி வருகை தந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வத்தேகம, ஹொரண, ராகம, களனி, அவிஸ்ஸாவனை, கெஸ்பேவ, கிரிபத்கொட ஆகிய பிரதேசங்களில் இருந்தும் மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியாக கோட்டா கோ கமவை நோக்கி சென்றனர். மேலும் பல பிரதேசங்களிலிருந்து ஆர்ப்பாட்டப் பேரணிகள் கோட்டா கோ கமவை நோக்கி வருகை தந்தனர்.

புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அனைத்து இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் மாலை நடத்திய ஆர்ப்பாட்ட பேரணியை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் வெள்ளி 9.00 மணி முதல் மறுஅறிவித்தல் விடுக்கும் வரை பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

எனினும் சனிக்கிழமை காலை 8.00 மணியுடன் பொலிஸ் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. அத்துடன், சமூக ஊடகங்களும் வெள்ளியும் சனியும் சுமார் ஒரு மணித்தியாலம் செயலிழந்தது. இவ்வாறான சூழ்நிலையிலேயே திட்டமிட்டப்படி சனிக்கிழமை 09 யூலை 2022 ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்கான இறுதி மக்கள் போராட்டம் என்ற தொனிப்பொருளிலான போராட்டம், பேரிணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆர்ப்பாட்டத்தில் எதிர்க் கட்சி எம்.பிகளான திஸ்ஸஅத்தநாயக்க, ரவுப் ஹக்கீம், மனோ கணேசன், ஹர்சனராஜ கருணா, சரத் பொன்சேக்கா, வடிவேல் சுரேஸ் உள்ளிட்ட பல எம்பிக்கள் பங்கேற்றிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த ராஜிதசேனாரத்ன மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றபோது காயமடைந்த நிலையில் வடிவேல் சுரேஸ் எம்.பி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று அவரது ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பொலிஸ் விசேட அதிரடிப் படை வீரர் ஒருவரும் இராணுவ வீரர்கள் சிலரும் இணைந்து கொண்டனர். அத்துடன் பொலிஸ் அதிகாரி ஒருவரும் மக்கள் போராட்டத்தில் கைக் கோர்த்திருந்தார்.

பொலிஸ் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ்அதிகாரி மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு தலைக் கவசத்தை தூக்கியெறிந்து விட்டு உரத்த தொனியில் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர்.

கோ ஹோம். போராட்டம் வெற்றிபெற வேண்டும் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்றவாறு அவர் கோஷம் எழுப்பியவாறு போராட்டத்தில் இணைந்து கொண்டார். இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்றிருந்த இளைஞர்கள் பொலிஸ் அதிகாரியின் செயற்பாட்டை பாராட்டும் வகையிலும் வரவேற்கும் வகையிலும் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

மஹரகமவிலிருந்து கொழும்பை நோக்கி சென்ற ஆர்ப்பாட்டப் பேரணியிலேயே அவர் இவ்வாறு இணைந்து கொண்டுள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் முக்கியஸ்தர்களின் வாகனங்கள் கட்டுநாயக்க நோக்கிப் பயணித்தமையை சமூக ஊடகங்களின் வாயிலான அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மூன்று வாகனங்கள் இவ்வாறு கட்டுநாயக்க நோக்கி பயணித்துள்ளதுடன் இந்த வாகனத்தில் பயணித்தவரின் விவரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தை அடைந்த வாகனங்கள் விமானங்கள் நிறுத்தப்பட்டிருந்த பகுதிக்குள் செல்லும் காட்சிகளும் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

அத்துடன் கொழும்பு துறைமுகத்திலிருந்து கடற்படைக்கு சொந்தமான சித்துரல மற்றும் கஜபாகு ஆகிய கப்பல்கள் அங்கிருந்த சில நபர்களுடன் புறப்பட்ட சென்ற காணொளியை துறைமுகத்தில் பணியாற்றியவர்கள் வெளியிட்டிருந்தனர். மிகவும் வேகமாக பயணப்பைகளை மூவர் கப்பல்களில் ஏற்றும் காட்சிகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கப்பல்களில் சென்றவர்கள் யாரென்றுதனக்கு தெரியாது என்று துறைமுக அதிபர் தெரிவித்துள்ளார். கொழும்பு காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது மிலேச்சத்தனமான வன்முறை கட்டவிழ்த்து மூன்று மாதங்கள் நிறைவடைந்த நிலையிலேயே கடந்த சனிக்கிழமை மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது.

மே 09 ஆம் திகதி வன்முறையானது முன்னாள் பிரதமரை பதவி விலக செய்து நாட்டில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் ஜூலை 09ஆம் திகதி ஜனாதிபதி செயலகமும் ஜனாதிபதி மாளிகையும் போராட்டக்காரர்கள் வசமானதுடன் மாபெரும் மக்கள்எழுச்சி போராட்டமாக இந்த போராட்டம் மாறியுள்ளதுடன் மீண்டுமொரு ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுத்துள்ளது.

ஈழநாட்டிற்காக
க.ஆ.கோகுலவாணி

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! யூலை மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

09 யூலை 2022 முதல் 15 யூலை 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையைப் வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 11 யூலை 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இளைய பிள்ளை கனகரெத்தினம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குலசேகரம்பிள்ளை மங்கையற்கரசி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவுநாள் 12 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடைய குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நளினி அழகராஜா

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி நளினி அழகராஜா அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 21 யூலை 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி நளினி அஜகராஜா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 7வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு ஜெயகணேசா கெங்காதரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு ஜெயகணேசா கெங்காதரன் அவர்களின் ஏழாவது ஆண்டு நினைவுநாள் 09 யூலை 2022 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ஜெயகணேசா கெங்காதரன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர், நண்பர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார்

இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாள் 12 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கிருபாமலர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி
### சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு நாள் 13 யூலை 2022 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 யூலை 2022 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு ஜெயகணேசா கெங்காதரன் அவர்களது 7வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்புஉணவு வழங்கினார்கள்



09 யூலை 2022 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் சர்வநிரோஜ் ஜெய்சங்கர் செல்வி சுகன்யா சிவபாலன் ஆகியோரது திருமண இணைவு நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



05 யூலை 2022 செவ்வாய்க்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களது 90வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 10 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமை திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



11 யூலை 2022 திங்கட்கிழமை கட்டுவனைப் பிறப்பிடமாகவும் யாழ்.ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இளையபிள்ளை கனகரெத்தினம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 யூலை 2022 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 யூலை 2022 செவ்வாய்க்கிழமை இளவாலை கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருபாமலர் ஜனார்த்தனகுமார் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 யூலை 2022 புதன்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 யூலை 2022 புதன்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் ரொறன்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



13 யூலை 2022 புதன்கிழமை வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரத்துவமாது திருமதி ஜெயநாயகி தங்கராஜா அவர்களது பிறந்த நாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



15 யூலை 2022 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி விஜயரூபன் காயத்திரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஆறியன் விஜயரூபனின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் ஆறியன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வுக்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 10வது ஆண்டு நிறைவின் இராப்போசன விருந்தும் இன்னிசை மாலையும் 06 நவம்பர் 2022 ஞாயிற்றுக்கிழமை

## 90வது பிறந்தநாள் நல்வாழ்த்து




## திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களது 90வது பிறந்த நன்நாள் 05 யூலை 2022 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் தனது இல்லத்தில் பிறந்த நன்நாளை மிக எளிமையாகக் கொண்டாடிய பெரியவர் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்கள் 10 யூலை 2022 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கும் சிறப்பு உணவும் குளிர்பானங்களும் வழங்கி மகிழ்ந்தார். அகவை 90 காணும் திரு சின்னத்தம்பி சுந்தரலிங்கம் அவர்களை நூற்றாண்டு காலம் வாழ வேண்டுமென வாழ்த்தும் அவரது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் வாழ்த்துகின்றார்கள். வாழ்க வளமுடன்!

வீடு மற்றும் வாகன காப்புறுதி
HOME & AUTO INSURANCE

வீடு HOME
வாகனம் AUTO
மோட்டர் சைக்கிள் MOTOR CYCLE
படகு BOAT
கனரக வாகனம் TRAILER

காப்புறுதித் தேவைகளுக்கும், விபரங்களுக்கும் அழையுங்கள்



TR
FORTUNE FAVOURS THE BOLD

CALL NOW FOR A QUOTE!
THUSHANTHAN RAVINDRAN
647-401-2653

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- Vistation
- Funeral & Memorial Service
- Reception
- Burial
- Cremation



Vilosanan Sivatharman
Funeral Director
416-993-0826



Christeen Seevaratnam
416-258-6759

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

EMOTIONAL BENEFITS
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

உ
சிவமயம்






# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

**635 MIDDLEFIELD ROAD, SCARBOROUGH, ON, M1V 5B8 TEL: 416-321-6104 | www.ayyappan.com**

## ஸ்ரீ கற்பகவிநாயகர், ஸ்ரீ நாகபூசணி அம்மன், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி

## மும்மூர்த்தி அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

**03.07.2022 ஞாயிறு தொடக்கம் 19.07.2022 செவ்வாய் வரை**

எம்பெருமான் அடியார்களே!

ஐயப்பன் ஆலயத்தில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானுக்கும், ஸ்ரீ நாகபூசணி அம்பாளுக்கும், கஜவல்லி, மஹாவல்லி சமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கும் ஏக காலத்தில் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 19.07.2022 செவ்வாய்க்கிழமை வைரவர் சாந்தி வரை மூன்று சுவாமிகளுக்கும் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளதால், Covid - 19 சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அடியார்கள் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்துப் பலன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**திருவிழா ஆரம்பம்: 03.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**சப்பறத் திருவிழா: 15.07.2022 வெள்ளிக்கிழமை மாலை**
**தேர்த் திருவிழா: 16.07.2022 சனிக்கிழமை பகல்**
**தீர்த்தத் திருவிழா: 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை**
**திருக்கல்யாணமும் பூங்காவனமும்: 18.07.2022 திங்கட்கிழமை**
**வைரவர் சாந்தி: 19.07.2022 செவ்வாய்க்கிழமை**

## கிரியாகால விபரம்

**03.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணிக்கு கணபதி ஹோமம்**

**தினமும்:** மாலை 6:00 மணிக்கு அபிசேகம் — இரவு 8:00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை
இரவு 7:30 மணிக்கு விசேட பூசை — இரவு 8:15 மணிக்கு சுவாமி வீதி வலம் வருதல்
இரவு 9:15 மணிக்கு பிரசாதம் வழங்கல், நடைசாத்தல்

| | |
|---|---|
| **தேர்த்திருவிழா 16.07.2022** | 16.07.2022 சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு சங்காபிசேகம் 9:00 மணிக்கு விசேட பூசை, 10:00 மணிக்கு வசந்தமண்டப பூசை ஆரம்பித்து, தொடர்ந்து 11:00 மணிக்கு மூன்று அழகிய சித்திரத் தேரில் பிள்ளையார், நாகபூசணி அம்மன், முருகப் பெருமான் வீதிவலம் வரும் அற்புதக் காட்சி நடைபெறும். நண்பகல் 12:00 மணிக்கு பச்சைசாத்தப் பெற்று தொடர்ந்து 1:00 மணிக்கு பிராயச்சித்த அபிசேகம் நடைபெற்று தேரடி உற்சவம் இடம் பெறும். |
| **தீர்த்தம் 17.07.2022** | 17.07.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு மூன்று சுவாமிகளுக்கும் தீர்த்தத் திருவிழா நடைபெறும். |
| **பூங்காவனம் 18.07.2022** | 18.07.2022 திங்கட்கிழமை மாலை ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று பிள்ளையார், நாகபூசணி அம்பாள், முருகப் பெருமான் ஆகிய மூன்று சுவாமிகளுக்கும் பூங்காவன உற்சவம் நடைபெறும். |
| **வைரவர் மடை 19.07.2022** | 19.07.2022 செவ்வாய்க்கிழமை மாலை வைரவ சுவாமிக்கு விசேட அபிசேகம், மடை, பூசை என்பன நடைபெறும். |

முக்கிய குறிப்பு: அடியார்கள் ஒன்ராறியோ அரச Covid-19 விதிமுறைக்கு அமைய சுகாதார பாதுகாப்பைப் பின்பற்றி ஆலய தரிசனத்தை மேற்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner), Scarborough ON M1B 3C6**

Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca • www.sasilaw.ca**




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- ❑ **Personal Tax**
- ❑ **Corporate Tax**
- ❑ **Book Keeping & Accounting**
- ❑ **Payroll Services**
- ❑ **GST/HST Filing**
- ❑ **Corporate Services**
- ❑ **Business Startup**
- ❑ **Financial Planning**

## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# கோத்தாவின் வீழ்ச்சி!

ஒன்பதாம் திகதிக்கும் ராஜபக்சக்களுக்கும் பொருந்தி வராது போல? நிச்சயமாக இது ஒரு எண் சோதிடப் பதிவு அல்ல. அல்லது எண் சோதிடத்திற்கும் அரசியலுக்கும் இடையில் இருக்கக் கூடிய தொடர்பு பற்றிய பதிவும் அல்ல.

கடந்த மே மாதம் ஒன்பதாம் திகதி மஹிந்த மூட்டிய நெருப்பு அவருடைய ஆதரவாளர்களின் வீடுகளை எரித்தது. அவர் பதவி விலக நேர்ந்தது. இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரின் வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒரு பிரதேச சபை தலைவரும் அடித்தே கொல்லப்பட்டார்கள். இச்சிறிய தீவின் நவீன வரலாற்றில் ஆளுங் கட்சியை சேர்ந்தவர்களுக்கு அப்படி ஒரு ஆபத்து முன்னபொழுதும் வந்ததே இல்லை. மஹிந்த ராஜபக்ஷ தன் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை விட்டு ஓடித் தமிழ் பகுதிகளில் ஒரு படைத்தளத்தில் ஒழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின் யூன் மாதம் ஒன்பதாம் திகதி பசில் பதவி விலகினார். 09 யூலை 2022 அதே ஒன்பதாம் திகதி மஹிந்தவின் தம்பியார் கோத்தாவும் தமையனைப் போல ஓடித் தப்ப வேண்டி வந்தது.

ஒன்பதாம் தேதி ஆர்ப்பாட்டம் என்று அறிவிக்கப்பட்ட பொழுது அரசியல்வாதிகள் உஷாரடைந்து விட்டார்கள். மே ஒன்பதாம் தேதி நடந்தது இந்த ஒன்பதாம் தேதியும் நடக்கக் கூடாது என்று அவர்கள் திட்டமிட்டிருக்கலாம். அந்த அடிப்படையில் தான் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் இருந்து அவர்கள் ஏற்கனவே வெளியேறி விட்டார்கள். இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. மே மாதம் ஒன்பதாம் தேதி என்ன நடந்ததோ அதன் வளர்ச்சி தான் அடுத்த கட்டமாக ஜீலை 9ம் நடக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்

எனவே ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறி விட்டார். ஆர்ப்பாட்டக்காரர்கள் மாளிகையை கைப்பற்றி விட்டார்கள். இந்த இடத்தில் உற்றுக் கவனிக்க வேண்டிய ஒரு தோற்றப்பாடு உண்டு. அது என்னவென்றால் படைத்தரப்பு தொடர்ந்தும் ஒரு சாட்சி போல நிற்கிறது என்பது.

அப்படியென்றால் படைத்தரப்பு அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் இல்லையா? அரசியல்வாதிகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் சுற்றி வளைக்கும் பொழுது படைத் தரப்பு ஏன் அரசியல்வாதிகளை காப்பாற்றவில்லை? அல்லது அரசியல்வாதிகளின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை ஏன் காப்பாற்றவில்லை? முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வீட்டை ஏன் படையினர் பாதுகாக்கவில்லை? பொருளாதார நெருக்கடியால் படையினரின் குடும்பங்களும் துன்பப்படுவது மட்டும் தான் காரணமா? இந்த கேள்விகளுக்கு விடை வேண்டும்.

சம்பிக்க ரணவக்க கூறுகிறார் கோத்தா பதவி பதவி விலகா விட்டால் அவரை இராணுவத்தளபதி கைது செய்ய வேண்டும் என்று. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக படைத் தரப்பை முன்னிறுத்துவதில்லை என்ற கோத்தாவும் ரணிலும் கூட்டாக ஒரு தீர்மானம் எடுத்திருப்பார்கள் என்றே தோன்றுகிறது. அதன் மூலம் அவர்கள் படைத்தரப்பை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக நிறுத்தவில்லை.

அதாவது ஆர்ப்பாட்டக்காரர்களின் மீது வன்முறையை பிரயோகிப்பதற்குத் தேவையான கட்டளை படைத் தரப்புக்கு வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களும் படைத்தரப்பை எதிரியாக பார்க்கவில்லை.

இது தமிழ் மக்கள் உற்றுக் கவனிக்க வேண்டிய ஒரு விடயம். அதாவது தமிழ் மக்கள் எந்த படைக்கப்பட்டமைப்பின் மீது போர் குற்றச்சாட்டை சுமத்துகின்றார்களோ. அதே படைக் கட்டமைப்பு தென்னிலங்கையில் அரசாங்கத்துக்கு எதிராக நடக்கும் போராட்டங்களின் போது தன் சொந்த மக்களுக்கு எதிராக



துப்பாக்கியைப் பிடிக்கவில்லை. ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஒரு இராணுவ உயரதிகாரி ஒரு சிவிலியனை காலால் உதைக்கிறார். இது தவிர சில அருந்தலான மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன. ஆனால் பொதுப் போக்கு என்னவென்றால் படைத்தரப்பு பொதுமக்களோடு முட்டுப்பட விரும்பவில்லை. பொது மக்களும் படைத்தரப்பை எதிரியாக பார்க்கவில்லை என்பது தான். பெரும்பாலான மோதல்கள் போலீசார் மற்றும் அதிரடிப்படையுடன் தான்.

அதாவது ஆர்ப்பாட்டம் செய்யும் பொது மக்கள் விருப்பத்தோடு ஏந்தி வைத்திருக்கும் சிங்கக் கொடியைப் போல. அவர்கள் விருப்பத்தோடு முதுகில் போர்த்தியிருக்கும் சிங்கக்கொடியைப் போல. படையினரையும் அவர்கள் தங்களுடைய பிள்ளைகளாகவே பார்க்கிறார்கள். தங்களுக்கு புறத்தியாகப் பார்க்கவில்லை. அவர்கள் தமது படை என்றுதான் பார்க்கிறார்கள் அதை எதிரியாக பார்க்கவில்லை .

இந்த இடத்தில் தான் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இருந்து சற்று விலகி நிற்பதற்கான காரணம் இருக்கிறது. இதன் பொருள் படைத்தரப்பும் ஆர்ப்பாட்டக்காரர்களும் மோத வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதல்ல.

தமிழ் மக்கள் ராஜபக்சக்களின் மீது வைப்பது போர் குற்றச்சாட்டு. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்கள் ராஜபக்ச குடும்பத்தின் மீது முன் வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் திருட்டு குற்றச்சாட்டுகள் தான். போர்க் குற்றச்சாட்டுகளை வைப்பார்களாக இருந்தால் அது அதன் தர்க்கபூர்வ விளைவாக படைத்தரப்பையும் எதிரியாக்கும்.

ஏனென்றால் போர்க் குற்றச் சாட்டைப் பொறுத்தவரை படைத்தரப்பும் ராஜபக்சக்களும் ஒன்று தான். ராஜபக்சக்கள் அரசியல் தீர்மானத்தை எடுத்து படைத் தரப்பை வழி நடத்தினார்கள். அவர்கள் போட்ட உத்தரவுகளை படைத்தரப்பு நிறைவேற்றியது. எனவே இந்த விடயத்தில் எல்லாருடைய கைகளிலும் தமிழ் மக்களின் இரத்தம் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

எனது கட்டுரைகளில் நான் தொடர்ச்சியாக எழுதி வருகிறேன். கடந்த மார்ச் மாதம் 31 ஆம் தேதியிலிருந்து இன்று வரை தென்னிலங்கையில் இடம் பெற்று வரும் மக்கள் எழுச்சிகளின் போது இரண்டு சாட்சிகளை பார்க்கலாம் என்று. ஒன்று தமிழ்த் தரப்பு. மற்றொன்று படைத் தரப்பு. தமிழ்மக்கள் அதில் விலகி நிற்பதற்கு பல்வேறு காரணங்களை கூறுகிறார்கள். ஆனால் படைத்தரப்பு விலகி நின்று ஆர்ப்பாட்டக்காரர்களோடு மோதாத ஒரு போக்கை கடைப்பிடித்து வருகிறது. அப்படி ஒரு மோதல் ஏற்படுவதை சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு புத்திசாலித்தனமாக தவிர்த்து வருகிறது என்பதே சரி. ஆர்ப்பாட்டக்காரர்களும் இந்த விடயத்தில் புத்திசாலித்தனமாக நடந்து கொள்கிறார்கள்.

இப்பொழுது மிஞ்சி இருந்த ராஜபக்சவும் கவிழ்க்கப்பட்டு விட்டார். அவர் உத்தியோகபூர்வமாக தனது பதவி விலகலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் நடைமுறையில் அவர் இப்பொழுது நாட்டை நிர்வகிக்கவில்லை.எல்லா ராஜபக்ஷங்களும் பதவிகளைத் துறந்த பின்னரும் கோத்தா பதவியை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார். ஏனெனில், அதிகாரத்தில் இல்லை என்றால் தன்னையும் தனது குடும்பத்தவரையும் ஆதரவாளர்களையும் தூக்கி உள்ளே போட்டு விடுவார்கள் என்ற பயம் அவருக்கு உண்டு. மே மாதம் ஒன்பதாம் தேதி என்ன நடந்தது என்பது ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் அனைவருக்கும் அச்சுறுத்தலான. திகில் நிறைந்த ஓர் அனுபவம் தான். எனவே அதிகாரத்தை இழப்பது என்பது தன் சொந்த பாதுகாப்பையும் இழப்பதுதான் என்று கோத்தா சிந்தித்ததன் விளைவாகத் தான் அவர் பதவியைத் துறக்க மறுக்கிறார்.


இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும் யாரிடமிருந்து அவருக்கு ஆபத்து?


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –

எதிர்க்கட்சிகளிடம் இருந்தா? அல்லது ஆர்ப்பாட்டக்காரர்களிடம் இருந்தா? அல்லது படைத்தரப்பிடம் இருந்தா? அவரும் படைத்தரப்பும் ஒன்று தான். போர்க்குற்றம் என்று வரும் பொழுது இருவரும் ஒருவர் மற்றவரைப் பாதுகாப்பார்கள். எனவே படைத்தரப்பிடமிருந்து அவருக்கு ஆபத்து கிடையாது. ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களின் கைகளில் சிக்கினால் என்ன நடக்கும் என்று தக்கபூர்வமாக சிந்திப்பது கடினம். எனவே தன் சொந்த மக்களின் கோபத்திலிருந்து தப்புவதற்காகத் தான் அவர் ஓடி ஒழிய வேண்டி வந்தது.

எந்த மக்கள் அவருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குத் தேவையான மிகப்பலமான ஒரு பெரும்பான்மையை வழங்கினார்களோ. எந்த மக்கள் ஒரு இரும்பு மனிதர் வேண்டும் என்று கேட்டு அவரை விரும்பி பதவிக்கு கொண்டு வந்தார்களோ. அதே மக்கள் இப்பொழுது அவரை அவருடைய உத்தியோகபூர்வ மாளிகையில் இருந்து துரத்தியடித்து விட்டார்கள். அதே மக்களிடமிருந்து தன்னை பாதுகாப்பதற்காக அவர் எங்கேயோ ஒரு ரகசிய படைத் தளத்தில் ஒளிய வேண்டிய நிலை. தன் சொந்த மக்களிடமிருந்தே ஒழிய வேண்டிய ஒரு நிலை.

மே மாதம் ஒன்பதாம் பத்தாம் திகதியோடு (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இனுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com



ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

16 யூலை 2022 சனி- ஆடிப்பிறப்பு
உபயம்:- பா.ரகு குடும்பம்
25 யூலை 2022 திங்கள்- பிரதோஷ விரதம்
27 யூலை 2022 புதன்- ஆடி அமாவாசை விரதம்
31 யூலை 2022- ஞாயிற்று ஆடிப்பூரம்

ஆடி அமாவாசையன்று காலை 7.00 மணியில் இருந்து ஆலயத்தில்
பிதாவுக்கும் முன்னோர்க்கும் பிதிர்க்கடன் செய்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்



Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்



1.0% முதல் 1.5% வரை

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்


அதிரடி சிறப்பு வட்டி வீதம்


உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களிள் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com
416-757-0034
416-994-3861

# மகா சங்கங்களால் கட்டமைக்கப்பட்ட இலங்கைத்தீவின் அரசியல் மீண்டும் மகா சங்கங்களின் பிடிக்குள்!

தென் இலங்கை அரசியல் மீண்டும் ஒரு தீவிர நெருக்கடியை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. கடந்த 3 மாதங்களாக போராடிவரும் போராட்டக்காரர்கள் ஆட்சியில் உள்ள நிறைவேற்றதிகாரம் கொண்ட ஆட்சியாளரை விரட்டியடிக்க அதிக பிரயத்தனம் கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடி இரு பக்கம் தீர்வின்றி காணப்பட அதற்குக் காரணமான ஆட்சியாளர்களது. அதிகாரப் போட்டி மறுடக்கமாக இலங்கைத் தீவில் நெருக்கடியைத் தவிர வேறு எதனையும் அடைய முடியாது காணப்படுகிறது. அதிகாரத்திற்கான ஆள் மாற்றங்களும் பிராந்திய சர்வதேச சக்திகாது உத்தரவாதங்களும் தீர்வின்றிய அரசியல் இருப்பையே மீளவும் இலங்கை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளன.

இக்கட்டுரையும் நிறைவேற்றதிகாரத்திற்கு எதிரான மகாசங்கங்களின் நகர்வும் இலங்கைத்தீவின் அரசியல் போக்கினையும் தேடுவதாக உள்ளது.

இலங்கைத் தீவின் அரசியல் பௌத்த மகாசங்கங்களால் கட்டமைக்கப்பட்டு பாது காக்கப்படும் வடிவத்தை பல நூற்றாண்டு காலமாக அவதானிக்க முடிகிறது. இலங்கைத்தீவின் அரசியல் அதிகாரத்திற்கான அரச கட்டுமானம் பௌத்த மகாசங்கங்களால் வடிவமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

மன்னராட்சிக் காலத்தில் முடியதிகாரமும் மதமும் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது போல் நவீன இலங்கைத் தீவின் அரசியலிலும் மதமும் சிங்கள மொழியும் அரசுடன் ஒன்றிணைக்கப்பட்டு எழுதப்படாத அரசியலமைப்பின் கீழ். ஆளப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது. 1890 இல் அதகாரிக தர்மபாலவும் 1956இல் எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கவும் மகாவம்சதின் இருப்பின் நீட்சிக்கு வழி கொடுத்தவர்களாக விளங்கினர்.

அதன் இன்னோர் கட்டமாகவே ஒரே நாடு ஒரே சட்டத்திற்கான வலுவை கொடுத்து சிங்கள பௌத்த நாடு என்ற இலக்கை அடைய திட்டமிடுகிறதைக் காணமுடிகிறது. அண்மையில் (29.06.2022) ஒரே நாடு ஒரே சட்டம் செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட அறிக்கை அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

குறிப்பாக தமிழர்களின் தேச. வழமை. கண்டியச் சட்டம் மற்றும் இஸ்லாமிய சமூகம் தொடர்பிலான சட்டங்கள் நீக்கப்படுவதற்கான கோரிக்கையும் அது தொடர்பிலான சட்டங்கள் உருவாக்க பணிக்கப்பட்டமையும் கவனத்திற்குரிய அம்சமாகும்.

இவ்வறிக்கை ஐக்கிய நாடுகளின் சமவாயங்களை உள்ளடக்க பணிப்புரை விடுத்தாலும் பல்லினங்களின் இருப்பினை நிராகரிக்கும் செய்முறையை பிரதான நடவடிக்கையாகக் கொண்டுள்ளமையே அதிக அபாயமானதாகத் தெரிகிறது. இவை பற்றிய புரிதல் அவசியமானது. அதனை விரிவாக நோக்குவது தேவையானதாக உள்ளது.

முதலாவது. பாரிய பொருளாதார நெருக்கடியின் போதும் அரசாங்கமும் பௌத்த சங்கங்களும் இன உணர்வை பிரதிபலிக்கும் செயல்பாடுகளை கைவிடுவதாக தென்படவில்லை. இலங்கைத்தீவின் வரலாறு முழுவதும் இனவாதமே பிரதான முதலீடாக அமைந்திருந்தது.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அத்தகைய இனவாத முதலிடே பிரதான காரணமாக அமைந்திருந்தது. அதனை என்றுமே கைவிடத் தயாராக இல்லாத சூழல் தென் இலங்கை அரசாங்கத்திடமும் அதற்கான அரச இயந்திரத்திடமும் காணப்படுகிறது. குருந்தூர்மலை விவகாரமும் வடக்கு, கிழக்கு மீதான ஆக்கிரமிப்பு நகர்வுகளும் தொடர்வதுடன். ஒரே நாடு ஒரே சட்டம் ஏனைய தேசியங்களின் உரிமைகளை நிராகரிப்பதாக அமைகிறது.

இரண்டாவது. பௌத்த மகாசங்கங்கள் நிறைவேற்றதிகாரம் மீது பதவி விலகுவதற்கு காலக்கெடுவை அறிவித்துள்ளதுடன், பல கட்சி அரசாங்கத்தை அமைப்பது பற்றியும் ஜனாதிபதியிடன் விண்ணப்பித்துள்ளன. மிக நீண்ட அமைதிக்குப் பின்னர் பௌத்த பீடங்கள் எழுச்சி பெற்றுள்ளன.



பௌத்த மத பீடங்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செவி சாய்த்து பதவி விலக வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. மிக நீண்டகாலம் காலிமுகத்திடலிலும் பரவலாக இலங்கைத் தீவு முழுவதும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகக் கோரிய போதும் நடைமுறைக்கு சாத்தியமற்றதாக காணப்பட்டிருந்தது. எந்த சூழலிலும் தாம் ஆட்சிக் காலம் முடியும் வரை பதவி விலகப் போவதில்லை எனக் கூறிய ஜனாதிபதி, தற்போது மகாசங்கங்கள் எழுச்சி பெற்றதுடன் பதவி விலகத் தயார் எனக் குறிப்பிட்டுள்ளமை இலங்கைத் தீவின் அரசியல் பௌத்த மகா சங்கங்களிடமே உள்ளதென்பதை அடையாளப்படுத்துகிறது.

பெத்த பீடங்களே இலங்கைத்தீவின் அரசு... அதன் கொள்கைகளும் முடிவுகளுமே அரசாங்கங்களின் தொழிற்பாடுகளாகும்.

மூன்றாவது. காலிமுகத்திடல் போராட்டக் குழுக்கள் அனைத்தும் இலங்கைத் தீவில் மாற்றத்தை ஏற்படுத்தப் போவதாக வடக்கு விஜயத்தின் போது கருத்து கொண்டிருந்த தன. இலங்கைத் தீவை முழுமையாக மாற்றத்துக்கு உள்ளாக்குவதுடன். தமிழ் மக்களுக்கான அரசியல் பிரச்சனைக்கு தீர்வு வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டிருந்தன. அதற்கான உரையாடலை வெளிப்படுத்துவதாக அவர்களது நகர்வுகள் அமைந்திருந்தன.

தமிழ் மக்களும் காலிமுகத்திடல் வெற்றிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை தருவதாகக் கருதினர். தற்போது இல்லாது விட்டாலும் எதிர்காலத்தில் அத்தகைய மாற்றம் இலங்கைத் தீவில் அனைத்து இனங்களும் ஒன்றிணைந்து வாழ முடியுமென கருதினர்.

அதற்கான நம்பிக்கையூட்டல்கள் தென் இலங்கை போராட்டத் தரப்புகளால் வழங்கப்பட்டன. ஆனால் நடைமுறை வேறு விதமானதாக அமைந்துள்ளது.

நான்காவது. காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான அதிருப்தி அரசாங்கத்தின் இயந்திரங்களால் அதிக அடக்குமுறைக்குள் உள்ளாகத் தொடங்கியுள்ளது. அதனை தடுத்து நிறுத்தும் திராணி இருந்தும் பௌத்த பீடங்கள் அமைதி காத்து வருகின்றன.

மாறாக பௌத்த பீடங்களே எழுச்சி பெற்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்து வருகின்றன. அப்படியானால் பொத்த பீடங்கள் தீவிர போக்குடைய போராட்டக்காரரிடமிருந்து போராட்டத்தை தம் பக்கம் வைத்துக் கொள்ள திட்டமிடுகின்றனர் என்பதாகவே தெரிகிறது. இதற்குப் பின்னால் பௌத்த பீடங்களிடம் தெளிவான அரசியல் காணப்படுகிறது.

போராட்டக்காரரது போராட்டம் வெற்றி பெற்றால் அரச இயந்திரம் அல்லது அரசு அவர்களது கட்டுப்பாட்டுக்குள் நகர்ந்து விடும். அது ஒரு பல்லினக் கட்டமைப்பை உருவாக்கி சுமுகமான மாற்றத்தை நோக்கி இலங்கைத்தீவு நகர்ந்து விடும். சிங்கள பௌத்த மேலாதிக்கம் தகர்ந்து போய் விடும் எனக் கருதுகின்றன. அதனைத் தடுத்து நிறுத்துவதே பௌத்த பீடங்களின் பிரதான நோக்கமாகும். இன்னோர் வகையில் கூறுவதாயின் இவை பௌத்த பீடங்களின் வெற்றிகரமான உத்தியாக அமைந்துள்ளன. இதனை முறியடிப்பது கடினமானதாகவே தெரிகிறது.

ஐந்தாவது. காலிமுகத்திடல் எத்தகைய கொள்கையை முன் வைத்தாலும் பௌத்த பீடங்களின் அரசியலுக்குள் இயங்க வேண்டியது தவிர்க்க முடியாததாகவே அமையும். அந்த சந்தர்ப்பத்தில் இலங்கைத்தீவு பௌத்த மதத்தின் இருப்புக்குள்ளேயே இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அப்போது காலிமுகத்திடலின் புரட்சிகரமான கொள்கைகள் அனைத்தும் முடிவுக்குள் வந்துவிடும்.

தற்போது கூட காலிமுகத்திடல் சிவில் அமைப்புகள் முன் வைத்த வரைபை அடிப்படையாகக் கொண்டே பலகட்சி அரசாங்கம் அமைக்க திட்டமிடல் நிகழ்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அது பல கட்சி அரசாங்கமேயன்றி பல்லினத் தேசிய அரசாங்கமல்ல என்பது அதன் ஆரம்பக் கட்ட வரையிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. அதில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருக்குமே அன்றி, தீர்மானம் எடுக்கும் செய்முறையில் தனித்துவமோ வீட்டோ அதிகாரமோ ஏனைய தேசியங்களுக்கு கிடைக்கப் போவதில்லை.

ஆறாவது, தென் இலங்கையின் கட்சி அரசியல் ஆட்சியை கோருவதில் கவனம் கொள்கிறதே அன்றி, நாட்டுக்குத் தேவையான கட்டமைப்பையோ பொருளாதார நெருக்கடியையோ தீர்க்கும் உபாயம் எதுவும் அற்றுக் காணப்படுகிறது. மரபான அரசியல் கட்சிகள் மட்டுமன்றி மரபுகளைக் கடந்த தரப்பெனக் கூறும் ஜே.வி.பி.யும் தற்போது ஆட்சி அதிகாரத்தை கோருகிறது. அனைத்து அரசியல் தரப்பும் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்குள்ளேயே தீர்வைக் காண முயல்கின்றன.

**கட்டுரையாளர்:**
**பேராசிரியர்**
**– K.T.கணேசலிங்கம் –**



அத்தகைய அரசியலமைப்பின் பலவீனங்களைக் கூட கண்டு கொள்ளத் தயாராக இல்லாத போது இலங்கைத் தீவில் எந்த மாற்றமும் சாத்தியப்படப் போவதில்லை . மக்கள் மரணிக்கும் நிலை அதிகரிக்க ஆரம்பித்து விட்டது.

தமிழ்த் தரப்பு எந்த முயற்சியும் இன்றி தீர்வு கிடைக்கும் என்ற கோசத்தை மீண்டும் முன்வைத்து செயல்படுவதாக காட்டிக் கொள்ள முனைகிறது. மக்களின் மரணத்திற்குப் பின்னர் தீர்வு யாருக்கானது என்ற கேள்வியே எஞ்சியுள்ளது.

நோர்வே. லண்டன். அமெரிக்கா என தமிழ் அரசியல்வாதிகள் உலா வருகிறார்கள். சொந்த மக்கள் நாளாந்தம் உணவுக்கு படும் அவஸ்தைப் பற்றி எந்தத் திட்டமிடலையும் முன்வைத்ததாக தகவல் இது வரை இல்லை.

இத்தகைய துயரத்திற்கு மாற்று அவசியமானதாகிறது. அதனை நோக்கி தமிழ் மக்களும் அதன் உண்மையான அரசியல் செயல்பாட்டாளர்களும் பயணிக்க தயாராக வேண்டும்.

எனவே மகாசங்கத்தின் பிடிக்குள்ளேயே இலங்கைத்தீவின் அரச இயந்திரம் மீளவும் செயல்படப் போகிறது. அதற்கான நகர்வுகளே தென் இலங்கையில் நிகழ்கிறது.

போராட்டத்தின் வலிமை மகாவம்ச மனோ நிலைக்குள்ளாலேயே நகர்கிறது. அதனை உலக ஆதிக்க சக்திகளும் கண்டு கொள்ளாது செயல்படுகின்றன. தென் இலங்கை அரசியல் கட்சிகளும் போராட்ட அமைப்புகளும் அத்தகைய எல்லைக்குள்ளேயே பயணிக்கின்றன. தமிழ்த் தரப்பு அனைத்தையும் மீண்டும் வீணடித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

**இக்கட்டுரை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பக்ஷா பதவி விலகுவதற்கு முன்னர் எழுதப்பட்டது என்பதை கவனத்தில் கொள்க.**

# சீனாவிடம் கற்க வேண்டிய பாடம்

ஹொங்கொங் மீண்டும் சீனாவின் வசமாகி 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை முன்னிட்டு கடந்த வாரம் பல்வேறு கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன.அதில் பங்கேற்பதற்காக சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் ஹொங்கொங்கிற்கு சென்றிருந்தார்.

அங்கு அவர் உரையாற்றிய போது, 'ஒரு நாடு, இரு ஆட்சிமுறை' என்ற கொள்கை மிகச்சிறந்த செயல் முறை என்றும், அதனை மாற்ற வேண்டிய அவசியமில்லை, அது நீண்டகாலத்துக்கு தொடர வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

1898ஆம் ஆண்டு பிரித்தானியாவினால் 99 ஆண்டு குத்தகைக்குப் பெறப்பட்ட ஹொங்கொங், கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு, பிரித்தானிய குடியேற்ற நாடாக விளங்கியது.

குத்தகை ஒப்பந்தம் முடிந்த போது, 1997ஆம்ஆண்டு அதனை சீனாவிடம் பிரித்தானியா ஒப்படைத்தது.

25 ஆண்டுகளுக்கு முன்னர் ஹொங்கொங் ஒப்படைப்பு நிகழும் போது, அதன் ஜனநாயகம், எதிர்காலம் குறித்த அச்சம் காணப்பட்டது. சீனாவின் ஆதிக்கத்துக்குள் வந்த பின்னர், ஜனநாயக, சுதந்திரங்கள், உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

ஆனாலும் உண்மையான ஜனநாயகத்தை இப்போது தான் ஹொங்கொங் வாசிகள் அனுபவிக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார் சீனத் தலைவர்.

ஹொங்கொங் மற்றும் மக்கோ ( Macau) ஆகிய இரண்டு பிராந்தியங்களையும் சீனா தனது விசேட நிர்வாகப் பிராந்தியங்களாக பேணுகிறது.

இங்கு சீனாவில் உள்ளதை விட சில நெகிழ்வான சட்டத் திட்டங்கள் உள்ளன. காரணம், இந்த இரண்டும் பிரித்தானிய மற்றும் போர்த்துக்கீசிய ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டவை. மேற்கத்திய கலாசாரத்தில் ஊறியவை என்பன மாத்திரமன்றி, சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கபுரியாக விளங்குபவையும் கூட.

உலகின் முக்கியமான வர்த்தக நகரங்களாக விளங்குவதால், இவற்றை சீனா தந்திரமான முறையில் கையாளுகிறது. மேற்குலக நாடுகளால் சர்வாதிகார ஆட்சி நிலவுவதாக கூறப்படும் நாடுகளில் ஒன்று சீனா.

அவ்வாறான சீனாவே, ஹொங்கொங், மற்றும் மக்கோவை, தனது பிரதான நிலப்பரப்பின் சட்டங்களுக்குக் கீழ் கொண்டு வரவில்லை. அதற்குப் பதிலாக, அவற்றை விசேட நிர்வாகப் பிராந்தியங்களாக வைத்திருக்கிறது.

ஒரு பக்கத்தில் தாய்வானுக்கு உரிமை கோருகின்ற சீனா, ஒரே சீனா என்ற கொள்கைளை ஏற்றுக் கொள்ளும் நாடுகளுடன் மட்டும் இயல்பான உறவுகளை பேணுகிறது.

தாய்வானுடன் இராஜதந்திர உறவுகளை வைத்துக் கொள்ளும் நாடுகளுடன் அது மல்லுக் கட்டுகிறது.

ஹொங்கொங்கில் ஜனநாயக போராட்டங்களை நசுக்கும் சீனா, தாய்வானை கைப்பற்றும் முனைப்புகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறானதொரு நிலையில் தான், கடந்த வாரம், கொழும்பில் உள்ள சீன தூதுவரை கீ சென் ஹொங்கை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், 'ஒரே சீனா' என்ற கொள்கையில் இலங்கை உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

ஒரே சீனா கொள்கையை இலங்கை ஏற்றுக் கொண்டு பல தசாப்தங்களாகி விட்டது. ஆனாலும் இப்போதும் 'ஒரே சீனா' கொள்கையில் உறுதியாக இருப்பதாக இலங்கை ஏன் வாக்குறுதி கொடுக்க வேண்டும் என்ற கேள்வி உள்ளது.

இலங்கை இப்போது மேற்குலக சாய்வு நிலையில் இருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் கடன்களில் இருந்து மீள்வதற்கு எதிர்பார்த்துள்ள இலங்கை, மேற்குலகம் கூறுகின்ற எதையும் செய்யக் கூடும் என்ற கவலை சீனாவுக்கு உள்ளது.




தாய்வான் விவகாரத்தில் சீனாவும் அமெரிக்காவும் ஒரு மறைமுகப் போரை நடத்திக் கொண்டிருக்கின்றன. இரண்டு நாடுகளும் நேரடியாக மோதிக் கொள்ளா விட்டாலும், பல்வேறு வழிகளில், சீனாவுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா.

இவ்வாறான நிலையில், இலங்கையையும், அமெரிக்கா தனக்கு எதிராக திசை திருப்பி விடுமோ என்ற கவலை, சீனாவுக்கு ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது.

அதனால் தான், காலம் காலமாக இருந்து வந்த ஒரே சீனா கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள எதிர்பார்த்திருக்கிறது சீனா.

இலங்கையும் அந்தச் சூழலைப் புரிந்து கொண்டு, நாங்கள் அமெரிக்காவின் பொறியில் சிக்கவில்லை என்பதை உறுதி செய்திருக்கிறது.

ஒரே சீனா கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கும் இலங்கை, 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை அமுல்படுத்துவதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறது.

இதற்காக கலகொடஅத்தே ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி, தமது அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கிறது.

அந்த அறிக்கையின் உள்ளடக்கம் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படாத போதும், அது நிச்சயம், தமிழர்களுக்குப் பாதகமான விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இரும்புப் பிடி நாடான சீனாவின் ஜனாதிபதி ஷி ஜின்பிங், 'ஒரே நாடு இரண்டு ஆட்சி முறைகள்' என்பதை வெற்றிகரமான கொள்கை என்றும், அது நீண்டகாலம் தொடர வேண்டும் என்றும் கூறுகிறார்.

ஆனால், இலங்கையோ 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்று கூறுகிறது. ஒரு நாட்டில் ஒரே சட்டம் தான் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்த இடத்தில் தான் இலங்கை சீனாவின் நிலைப்பாட்டுடன் முரண்படுகிறது.

கூடுதல் அதிகாரங்கள், உரிமையுடன் தமிழர்களின் தாயகப் பிரதேசத்துக்கு சுயாட்சி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு போதும், இலங்கை ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொண்டதில்லை.

வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் கீழ் அதிகாரங்களைப் பகிர இந்தியா வலியுறுத்திய போது, இலங்கை அரசாங்கம், எல்லா மாகாணங்களிலும் மாகாண சபைகளை உருவாக்கியது.

இது தமிழர்களுக்கென தனியான அதிகாரப் பகிர்வு அல்லது அலகு ஒன்று உருவாக்குவதற்கு சாத்தியமில்லை என்ற சமிக்ஞை உறுதியாக வெளிப்படுத்தப்பட்ட தருணமாகும்.

இந்தியாவின் வலுவான தலையீடும், விடுதலைப் புலிகள் வலுவான நிலையில் இருந்தபோதும் தான், இலங்கை அரசாங்கம் அவ்வாறான நிலைப்பாட்டை எடுத்தது.

இப்போது, இந்தியாவின் வலுவான அழுத்தங்களும் இல்லை. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட அழுத்தங்களும் இல்லை.

இவ்வாறான நிலையில் தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரங்களைப் பகிருகின்ற ஒரு நிர்வாக அலகிற்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் இணங்குவார்கள் என்றில்லை.


ஹொங்கொங் மற்றும் மக்கோ ஆகியவற்றுக்கு விசேட நிர்வாக பிராந்தியம் என்ற அந்தஸ்தையும், திபெத் மற்றும் குவாங்ஷி, மொங்கோலியா, திபெத், ஜின்ஜியாங், நிங்ஷியா ஆகிய ஐந்து தன்னாட்சிப் பிரதேசங்களையும் கொண்டிருக்கின்ற சீனா, அங்கு ஜனநாயக உரிமைகளையோ, சுதந்திரங்களையோ அனுமதிக்கவில்லை என்ற போதும், இருவேறு ஆட்சிமுறைகளை அங்கீகரித்திருக்கிறது.

மனித உரிமை மீறல், ஜனநாயக மறுப்பு குற்றச்சாட்டுகளை சீனா எதிர்கொண்டுள்ள போதும், இருவேறு ஆட்சி முறைகளின் ஊடாக, சீனா தனது பொருளாதாரத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

ஆட்சிமுறை சார்ந்த விவகாரங்களினால், சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டு விடக்கூடாது என்பதற்காக, சீனா தன் இறுக்கமான போக்கில் இருந்தும் நெகிழ்வாக நடந்து கொள்கிறது.

ஆனால், தமிழர்களுக்கு இம்மியளவு நிலத்தையும் விட்டுக் கொடுக்க முடியாது என்ற இறுமாப்பு போக்கில்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
-கேணல் ஹரிகரன் -



இருந்து விடுபடாத இலங்கையால், தமிழர்களுடன் இணக்கமாக வாழவும் முடியவில்லை. நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும் தெரியவில்லை.

ஒரே நாடு ஒரே ஆட்சி முறை மட்டும் தான் ஒரு நாட்டின் வெற்றியைத் தீர்மானிக்கிறது என்பது பொய்யானது என்பதையே சீனத் தலைவரின் கருத்து நிரூபித்திருக்கிறது.

இதற்குப் பின்னரும், கோட்டா அரசாங்கம் ஒரே நாடு ஒரே சட்டம் கொள்கையை அமுல்படுத்தினால், நாடு நாசமாகிப் போவது உறுதி.



# போராட்ட வெற்றியின் அடுத்த கட்டம் என்ன?

அறுபத்தியொன்பது இலட்சம் மக்களின் வாக்குகளுடன் அதிகாரத்துக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச அந்த மக்களாலேயே வெறுத்து துரத்தப்பட்டிருக்கின்றார். நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு கூட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்குரிய சிறப்புரிமை தான் அவருக்குத் தேவையாக இருந்திருக்கின்றது. பாதுகாப்பான ஒரு இடத்தில் குடியேறும் வரையில் தனது பதவிதுறப்புக் கடிதத்தை கையளிக்காதிருப்பதற்கும் அவர் திர்மானித்திருக்கின்றார்.

கடந்த வாரம் இந்தப் பகுதியில் குறிப்பிட்டிருந்ததைப் போல ஜீலை 9 ஆம் திகதி இலங்கையில் முக்கியமான மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியது. ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் என்பவற்றுடன் பிரதமரின் உத்தியோகபூர்வ வாஸஸ்தலமான அலரி மாளிகையும் கோட்டா கோ கம போராட்டக்காரர்களின் வசமானது. பாதுகாப்புப் படைகளின் தடுப்புச் சுவாகள், கணணீர்ப் புகை, நீர்த்தாரை பிரயோகங்களுக்கு மத்தியில் அவை போராட்டக்காரர்களால் முற்றுகையிட்டு கைப்பற்றப்பட்டன.

அன்றைய தினம் தலைமறைவான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது பதவியை 13 ஆம் திகதி புதன்கிழமை துறப்பதாக சபாநாயகருக்கு அறிவித்தார். பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அதனை உறுதிப்படுத்தும் செய்தி ஒன்றை அவர் கொடுத்திருந்தார். தன்னுடைய பதவி நிலையைப் பயன்படுத்தி வெளிநாடு ஒன்றில் பாதுகாப்பாக செட்டில் ஆகி விடுவதற்கு வசதிக்காகவே இவ்வாறு கால அவகாசத்தை அவர் பெற்றிருந்தார். நாட்டில் இருப்பது ஆபத்தானது என்பது அவருக்குத் தெரியும்.

இந்தப் பின்னணியில் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு டுபாய்க்குப் பயணமாவதற்காக அவரும் அவரது மனைவியும் கட்டுநாயக்க விமான நிலையம் வந்த போதிலும் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளின் அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டார்கள். அதன் மூலமாக கிடைத்த அனுபவத்தின் அடிப்படையில் புதன்கிழமை அதிகாலை இரண்டாவது முயற்சியை அவர்கள் முன்னெடுத்தார்கள்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களை இரண்டு விடயங்களில் அவர் பயன்படுத்தினார். ஒன்று - நிறைவேவற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் வெளிநாடு செல்ல விரும்பினால் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இரண்டாவது, ஜனாதிபதி கேட்டுக் கொண்டால் விமானப்படை அவரது தனிப்பட்ட பயணத்துக்காக ஜெட் விமானம் ஒன்றை வழங்க வேண்டும்.

வழமையான விமானத்தில் ஏனைய பயணிகளுடன் பயணம் செய்வது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையலாம். அல்லது தன்னை வெளியேறுமாறு ஏனைய பயணிகள் போராடலாம் என்ற நிலையில்தான் தனிப்பட்ட விமானத்தைப் பயன்படுத்தி நாட்டை விட்டுத் தப்புவதற்கு கோட்டாபய தீர்மானித்தார். ஜனாதிபதி என்ற பதவி நிலை இதற்கு அவருக்கு கைகொடுத்தது. ஜனாதிபதிப் பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்னரே பாதுகாப்பான இடம் ஒன்றுக்குச் சென்று விட வேண்டும் என அவர் துடித்தமைக்கு இவை தான் காரணம்.

அதேவேளையில் இதில் கவனிக்கத்தக்க மற்றும் இரு விடயங்களும் உள்ளன. ஒன்று - மாலைதீவு ஜனாதிபதியுடன் ராஜபக்ச குடும்பத்துக்கு தனிப்பட்ட உறவு உள்ளது. அதனால் அவர் தன்னை பாதுகாப்பார் என கோட்டாபய கருதியிருக்கலாம். இரண்டு - விமானப்படையின் ஜெட் விமானத்தைப் பயன்படுத்தும் போது அண்டை நாடு ஒன்றுக்குச் செல்வதற்கே அதனைப் பயன்படுத்த முடியும். சிங்கப்பூர் அல்லது டுபாய்க்கு அதில் செல்வதானால் நடைமுறைப் பிரச்சினைகள் பல உள்ளன. அதனால்தான் உடனடி முடியாக முதற்கட்டமாக மாலைதீவுக்குச் செல்வதற்கு கோட்டாபய தீர்மானித்தார்.



ஆனால், மாலைதீவில் தொடர்ந்தும் தங்கியிருக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். அங்கு பெருமளவுக்கு சிங்களவர்கள் உள்ளனர். அதனால் தான் அங்கிருந்து சிங்கப்பூர் சென்று மத்திய கிழக்கு நாடு ஒன்றுக்குச் சென்று விடுவதற்கு அவர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகின்றது. அமெரிக்காவுக்கு மீண்டும் சென்றால், அங்கும் வழக்குகள் எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அத்துடன் அமெரிக்கா கோட்டாபாயவின் விசாவை ஏற்கனவே ரத்துச் செய்து விட்டது. இந்த நிலையில் தான் மத்திய கிழக்கு நாடு ஒன்றில் தங்குவதற்கு அவர் தீர்மானித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

வெளிநாடுகளில் தனக்கு நிரந்தரமான பாதுகாப்பான இடம் ஒன்றைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்கும் ஜனாதிபதி என்ற பதவி அவருக்குத் தேவை. இலங்கையின் முதற்பிரஜை என்ற முறையில் கிடைக்கக்கூடிய சிறப்புரிமைகளையும் சட்டத்திலிருந்து விதி விலக்கைப் பெறுவதற்கான உரிமையையும் பயன்படுத்திக் கொள்வதற்கு அவர் முற்படுகின்றார். அவரது ராஜினாமா கடிதம் தாமதமாவதற்கும் அது தான் காரணம்! இலங்கை அரசியலமைப்பின்படி வெளிநாடு ஒன்றில் ஜனாதிபதி தங்கியிருக்கும் போது நாட்டில் தனது கடமைகள், பொறுப்புக்களை செய்ய முடியாது எனக் கருதினால் பதில் ஜனாதிபதியாக பிரதமரை நியமிக்க முடியும். அதன்படி தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக அவர் தற்போது நியமித்திருக்கின்றார்.

இதிலுள்ள மிகவும் ஆபத்தான அம்சம் என்னவென்றால், எவ்வளவு காலத்துக்கும் இவ்வாறு பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்து விட்டு ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்க முடியும். அதாவது, தனது பதவிக்காலம் முடிவடையும் வரையில் கூட இதனை அவர் தொடரமுடியும். அவ்வாறு நடைபெற்றால், பாராளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு கூட இடம் பெறத்தேவையில்லை.

ஆனால், இந்த நிலை தொடர்ந்தால் போராட்டக்காரர்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை. நாடு இரத்தக்களரியாவதற்கும் தற்போதைய பொரளாதார நெருக்கடி தீவிரமடைவதற்கும் அது வழிவகுக்கலாம். ஸ்திரமற்ற ஒரு அரசியல் நிலையைத் தான் அது தோற்றுவிக்கும். அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அது ஆபத்தாகலாம். வெளிநாட்டில் இருக்கும் கோட்டாபயவுக்கும் நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் இவ்வாறான நிலை ஏற்படுத்தும். இந்த நிலையில் கோட்டாபயவின் இராஜினாமா கடிதம் எப்படியும் கிடை க்கும் என எதிர்பார்க்கலாம். அவ்வாறான நிலையில் தற்காலிக ஜனாதிபதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படுவார். பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு எதிர்க்கட்சிகளும் போராட்டக்காரர்களும் கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கும் நிலையிலும் அதனை ஏற்றுக் கொள்வதற்கு விருப்பமற்ற ஒருவராகவே ரணில் இருக்கின்றார். அழுத்தங்கள் அதிகரித்து ஜனாதிபதி பதவி விலக முன்னர் ரணில் விலகினால், சபாநாயகர் இடைக்கால ஜனாதிபதியாக பதவியேற்பார்.

அதனைத் தொடர்ந்து 15 ஆம் திகதி இடம் பெறும் விசேட பாராளுமன்றக் கூட்டத்தில் ஜனாதிபதி பதவி விலகியமை தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். 19 ஆம் திகதி புதிய ஜனாதிபதிப்பதவிக்கு போட்டியிடுபவர்களின் நியமனங்கள் பாராளுமன்றத்தில் பெறப்படும். எம்.பி.க்களர் யாரும் இதில் போட்டியிட முடியும். 20 ஆம் திகதி இரகசிய வாக்கெடுப்பு எம்.பி.க்கள் மத்தியில் இடம்பெறும்.

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
- பார்த்தீபன் -

தற்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேதமாச, அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் களத்தில் குதிப்பதற்குத் தயாராகவுள்ளனர்.

இதில் பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கும் மொட்டு அணி ரணிலை ஆதரிக்கும் வாய்பு அதிகமாகவுள்ளது. ராஜபக்சக்கள் யாரும் இல்லாத நிலையில், ரணில் வருவதே தமக்குப் பாதுகாப்பானது என அவர்கள் கருதுகின்றார்கள். ரணிலும் அந்த நம்பிக்கையுடன்தான் காய்நகர்த்தி வருகின்றார்.

ஆனால், இப்போதுள்ள முக்கியமான கேள்வி என்னவென்றால், போராட்டக்காரர்கள் ரணிலை ஆதரிப்பார்களா என்பது தான்.

அதே வேளையில், ரணில் இல்லையென்றால் இந்த நெருக்கடியான நிலையை எதிர் கொள்ளக் கூடிய தலைவர்கள் வேறு யார் இருக்கின்றார்கள் என்பதற்கும் யாரிடமும் பொருத்தமான பதில் இல்லை!



# திராவிடக் கட்சிகளுக்கு இறங்கு முகமா?

கட்டுரையாளர்:- தமிழகத்தில் இருந்து
- குடந்தையான் -

தமிழகத்தை பொறுத்தவரை கடந்த 60ஆண்டு காலத்திற்கும் மேலாக திராவிட கட்சிகளின் ஆட்சியே நடைபெற்று வருகிறது. தி.மு.க.-அ.தி.மு.க. என்ற இரட்டை திராவிட அரசியல் ஆளுமையில், தற்போது பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக அ.தி.மு.க.வில் ஒற்றைத் தலைமை குறித்து பாரியளவில் உட்கட்சிப்பூசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமையானது, நீடித்தால் தமிழக மக்கள் மீதான திராவிட அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தில் பலவீனம் ஏற்படும். இந்த தருணத்திற்காகவே காத்திருக்கும் தேசிய கட்சிகள், இதனூடாக அரசியல் ரீதியில் காய்களை நகர்த்தி, தமிழகத்தில் காலூன்ற கூடும் என்றே கணிப்பிடப்பட்டுள்ளது.

இதனை பறைசாற்றும் வகையில் அண்மையில் ஹைதராபாத்தில் நடைபெற்ற பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா, தெற்கை நோக்கி..' என்ற அரசியல் கோஷத்தை முன்மொழிந்திருக்கிறார்.

பா.ஜ.க. கடந்த எட்டு ஆண்டுகளாக மத்திய அரசில் ஆட்சி அதிகாரத்துடன் வலம் வருகிறது. அருணாச்சலப் பிரதேசம், சிக்கிம், கோவா, கர்நாடகா, புதுச்சேரி, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் குறுக்கு வழிகளில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருக்கிறது

இந்நிலையில் வலிமையாக இருக்க வேண்டிய எதிர்க்கட்சியான அ.தி.மு.க., ஒற்றை தலைமை வேண்டும் என்ற கோஷத்தை முன்னிறுத்தி உட்கட்சி பூசலை உண்டாக்கி இருக்கிறது. அ.தி.மு.க.வின் பொதுக்குழு மற்றும் செயற்குழு நிர்வாகிகளில் பெரும்பான்மையானவர்கள் எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

எனினும், இரட்டை தலைமை தான் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் பன்னீர்செல்வத்திற்கு ஆதரவான தொண்டர்கள் மற்றும் நடுநிலையான நிர்வாகிகள் பலர் தமது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றார்கள்.

பொதுக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களின் ஒப்புதலை மட்டும் பெற்றால் போதும் என்று கணக்கு போட்டு, அவர்களை மறைமுகமாக நன்கு 'கவனித்து, அவர்களின் ஆதரவை பெற்றிருக்கும் எடப்பாடி பழனிச்சாமிக்கு, நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை அளித்திருக்கிறது.

இருப்பினும் உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருப்பதால், அ.தி.மு.க.வின் பொதுக்குழு கூடுமா என்ற சந்தேகங்கள் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும், தடைகளைக் கடந்து 11ஆம் திகதியன்று கூட்டம் இடம்பெறுமாயின் அதில் எடுக்கப்படும் முடிவுகள் தற்காலிகமானவையாக இருந்தாலும் அல்லது நிரந்தமானவையாக இருந்தாலும் அது அ.தி.மு.க.வை வலிமைப்படுத்தும் என்ற நிலைப்பாட்டில் பலர் உள்ளனர்.



அவ்வாறு கூட்டம் கூட்டப்பட்டால், தற்போது அ.தி.மு.க.வில் ஒற்றை தலைமை வேண்டும் என்பதற்காக எடப்பாடி பழனிச்சாமி ஆதரவாளர்கள் முன்வைக்கும் இடைக்கால பொதுச் செயலாளர் பதவிக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்திருக்கிறது.

இது தொடர்பாக அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் மருது அழகுராஜ் மற்றும் முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன் ஆகியோர், எம்.ஜி.ஆர். அவர்கள் எழுதிய உயிலை மேற்கோள் காட்டி, பொதுச் செயலாளர் பதவிக்கு தேர்தல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

ஒற்றைத் தலைமை குறித்த விவகாரத்தால் அ.தி.மு.க. பலவீனப்பட்டு, தி.மு.க. அரசுக்கு எதிராக எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையோ அல்லது கண்டனத்தையோ தெரிவிக்காமல் அரசியல் செய்து வருவதை அக்கட்சிக்கு வாக்களித்த மக்கள் விரும்பவில்லை.

இதனை அக்கட்சியின் முன்னணி தலைவர்களும், தலைமை கழக நிர்வாகிகளும் உணர்ந்து மக்கள் பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும், உட்கட்சி பிரச்சினைகளை சுமுகமான பேச்சுவார்த்தைகளில் மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இவ்வாறிருக்கையில், தி.மு.க.விலிருந்து தன்னை கருணாநிதி எளிதாக நீக்கியதால், புதிதாக தொடங்கிய தன்னுடைய கட்சியில் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஒருவரை நீக்க வேண்டும் என்றால், அதற்கு தொண்டர்களின் ஆதரவு வேண்டும் மற்றும் அதற்குரிய சில படிநிலைகளையும், நிபந்தனைகளையும் கட்சி விதிகளாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் உருவாக்கினார்.

அதேநேரம், எடப்பாடி பழனிச்சாமி, அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் என்ற உயர்ந்த பதவிக்கு தற்போதைய சூழலில் போராடி வரஇயலும் என்றாலும், அவர் அந்த பதவிக்குரிய தகுதியுடையவரா? என்பதை தொண்டர்கள் தான் ஆதரவளித்து உறுதியளிக்க வேண்டும்.

ஏனெனில் அவர் அ.தி.மு.க. பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட பிறகு, கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டு, வழக்கு தொடுக்கப்பட்டால், அவரால் தேர்தலில் போட்டியிட இயலுமா..?




சசிகலா முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டதும், அவர் மீதான ஊழல் வழக்கில் தீர்ப்பு வெளியாகி, எப்படி அவரது ஆசை நிராசையானதுடன் மட்டுமல்லாமல், அ.தி.மு.க.விலிருந்து ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்படுகின்றாரோ, அதேபோன்று ஒரு நிலை எடப்பாடி பழனிச்சாமிக்கும் வரக்கூடும் என்ற எதிர்வு கூறல்களும் உள்ளன.

ஆனால் இது தொடர்பாக ஆளுங்கட்சிகளாக இருக்கும் தி.மு.க மற்றும் பா.ஜ.க., அ.தி.மு.க.வில் நடைபெறும் குழப்பங்களை உன்னிப்பாக கவனித்து, அதனை எப்படி தங்களுக்கு சாதகமாக மாற்றிக் கொள்வது என்பதை மட்டுமே அவதானித்து வருகின்றார்கள். ஆனால் அமித்ஷாவின் பேச்சு குறித்து தமிழக பா.ஜ.க. நிர்வாகிகள் பேசுகையில், "குடும்ப அரசியலை முன்னிறுத்தியதால் தான் மகாராஷ்டிராவில் ஆளும் சிவசேனையில் அதிருப்தி ஏற்பட்டு பிளவு உண்டானது. அதே போல் குடும்ப அரசியல் செய்துவரும் தமிழகத்திலும், கட்சியின் முன்னணி நிர்வாகிகளிடத்தில் தலைமை மீதான அதிருப்தி விரைவில் பாரிய அளவில் வெளிபடும்.

அதன் பிறகு தி.மு.க. ஆட்சி கவிழும். தற்போது உதயநிதி ஸ்டாலினுக்கு கட்சியில் வழங்கப்பட்டு வரும் முக்கியத்துவத்தை கட்சியின் மூத்த அமைச்சர்கள் யாரும் விரும்பவில்லை என்பதால், விரைவில் தி.மு.க.விலும் அதிருப்தி அலை ஏற்பட்டு, உட்கட்சி பூசல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

தி.மு.க. தலைவரான மு.க.ஸ்டாலின் தற்போது முன்மொழிந்திருக்கும் 'திராவிட முறைமை அரசு' என்பதை, அரசியல் ரீதியாக அ.தி.மு.க. துல்லியமாக தெரிந்து கொண்டு, தன்னுடைய அரசியல் பாதையை தீர்மானிக்க வேண்டும்.

மத வெறுப்பு அரசியலை தனது கொள்கையாகக் கொண்டும், தனக்கு விருப்பமற்ற அல்லது ஒத்துழைக்காத அரசுகளை குறுக்கு வழியில் கவிழ்த்து, சாதுரிய அரசியலை செய்து வரும் பா.ஜ.க.வை கூட்டணியில் வைத்துக் கொள்வது குறித்து அ.தி.மு.க. மீண்டும் உரிய முறையில் பரிசீலித்து, தன் அரசியல் நடவடிக்கையை தமிழக மக்களின் நலன்களுக்காக மட்டுமே தொடர வேண்டும் என்பதே தொண்டர்களின் நோக்கமாக இருக்கிறது.

இதனை எடப்பாடியின் ஆதரவாளர்களும், பன்னீர் செல்வத்தின் ஆதரவாளர்களும் உணர்ந்து கொண்டு, இணைந்து அ.தி.மு.க.வை வழிநடத்த வேண்டும். இல்லையெனில் திராவிட அரசியல் நாணயத்தின் இரண்டு பக்கங்களாக திகழும் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. என்ற பிம்பம் சிதைக்கப்பட்டு, திராவிட அரசியல் பலவீனப்படுத்தப்படும் என்பதே யதார்த்தம்.




மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை

ஜாதகம் பார்க்கப்படும்

கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.

குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்

கோ. காசிலிங்கம்

1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)

Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164



# ராஜபக்ஷாக்களின் வீழ்ச்சியின் பாடங்கள்!

கட்டுரையாளர்:- கொழும்பில் இருந்து
மூத்த பத்திரிகையாளர்
- வீ.தனபாலசிங்கம் -

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது வெளிநாட்டு தொலைக்காட்சி சேவையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவரது குடும்ப உறுப்பினர்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது குறித்து கேட்கப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர் ராஜபக்ஷக்களை மக்கள் தெரிவு செய்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய முடியும்? மக்கள் விரும்பவில்லையானால் அவர்களை விரட்டுவார்கள். சகல ராஜபக்ஷக்களும் கூண்டோடு விரட்டியடிக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார். தற்போது நேர்காணலின் அந்த குறிப்பிட்ட பகுதியின் பதிவு சமூக ஊடகங்களில் பரவலாக உலாவருகிறது.

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து ராஜபக்ஷக்கள் அரசியலில் பங்கேற்று வந்தபோதிலும், ஒரு குடும்பமாக அவர்கள் அரசியலில் மட்டுமீறிய ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது 2005நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்தவின் வெற்றியேயாகும்.

அதற்கு பிறகு தான் அவரது சகோதரர்களும் பிள்ளைகளும் நெருங்கிய உறவினர்களும் அரசியலில் தீவிரமாக செல்வாக்கு செலுத்தத் தொடங்கினார்கள். ஆட்சிமுறையினதும் அரச இயந்திரத்தினதும் சகல கிளைகளிலும் அவர்கள் தங்கள் கொடுக்குகளை பரவியிருக்கிறார்கள்.

ஆட்சியதிகாரம் என்பது தங்களது தனிப்பட்ட சொத்து என்பது போன்று அவர்கள் நடந்து கொண்டார்கள். இலங்கை அரசியல் முன்னரும் சில குடும்பங்களின் செல்வாக்கின் கீழ் இருந்து வந்திருக்கின்ற போதிலும் ராஜபக்ஷக்கள் போன்று நாகரிக உலகம் அருவருக்கத் தக்கதாக அதிகாரவெறியுடனும் சொத்துக்களைக் குவிக்கும் பேராசையுடனும் குடும்ப ஆதிக்க அரசியலை அந்த குடும்பங்கள் நிலைப்படுத்தவில்லை.

இலங்கையில் இது கால வரையில் பதவியில் இருந்திருக்கக் கூடிய அரசாங்கங்களில் ராஜபக்ஷ அரசாங்கமே உச்ச பட்ச ஊழல் மோசடிகளும் அதிகார துஷ்பிரயோகமும் சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவும் கொண்டதாக அம்பலப்படுத்தப்பட்டு நிற்கிறது. அரசியலுக்கும் ஆட்சிமுறைக்கும் கெடுதியாவை எவையோ அவையெல்லாவற்றினதும் சின்னங்களாக ராஜபக்ஷக்களை நாடும் மக்களும் உலகமும் அடையாளப்படுத்துகின்றன.

ராஜபக்ஷக்களை மக்கள் விரும்பவில்லையென்றால் கூண்டோடு விரட்டியடிக்கப்படுவார்கள் என்று கூறிய மஹிந்தவின் கண் முன்னாலேயே அவர் கட்டியெழுப்பிய குடும்ப சாம்ராச்சியம் இன்று நிர்மூலமாகியிருக்கிறது. அவர் அதைக் கூறிய போது இவ்வளவு விரைவாக அந்த விரட்டியடிப்பு நடக்கும் என்று அவரோ அல்லது வேறு எவருமோ எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

தங்களின் செல்வாக்கை பல வருடங்களுக்கு அசைக்க முடியாது என்ற அசட்டுத் துணிச்சலுடனான நம்பிக்கை ராஜபக்ஷக்களுக்கு இருந்தது. இலங்கையில் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைக் கொண்ட தலைவராக விளங்கிய மகிந்த இன்று எங்கே இருக்கிறார் என்பதே மக்களுக்கு தெரியாமல் இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து விடு பட நிவாரணம் கோரி வீதிகளில் இறங்கி மக்கள் செய்யத்தொடங்கிய போராட்டம் நாளடைவில் முக்கியமான அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தும் மக்கள் கிளர்ச்சியாக மாறியது. ராஜபக்ஷக்கள் அரசியல் பதவிகளை விட்டு முற்றுமுழுதாக வெளியேற வேண்டும் என்பதும் அந்த கோரிக்கைகளில் ஒன்று.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மக்களின் வீதிப்போராட்டங்கள் தீவிரமடையத் தொடங்கியதை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு நெருக்குதல்கள் அதிகரித்தன.

ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்று மக்கள் கோரினார்கள். இந்த மக்கள் போராட்டங்களின் உலகறிந்த சின்னமாக கொழும்பு காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம' அரசியல் கிராமம் விளங்குகிறது. ஜனாதிபதி வேறு வழியின்றி அமைச்சரவையை பதவி விலகுமாறு கேட்டதையடுத்து சகல அமைச்சர்களும் (ராஜபக்ஷக்கள் உட்பட) ஏப்ரல் 4ல் பதவி விலகினார்கள்.

ஆனால், பிரதமர் மஹிந்த தொடர்ந்தும் பதவியில் இருந்தார். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவதாக இருந்தால் கூட தானே பிரதமர் என்றும் அவர் விதண்டாவாதம் பேசினார். ஆனால், மே 9 பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் இருந்து கட்டவிழ்த்து விடப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர்களும் குண்டர்களும் காலிமுகத்திடல் 'அறகலய' போராட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை அடுத்து நாட்டின் பல பாகங்களிலும் வன்முறைகள் வெடித்தன. அதற்கு பிறகு மஹிந்தவினால் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருக்க முடியவில்லை. சகோதரர் கோட்டாபயவுக்கு பதவி விலகல் கடிதத்தை அனுப்பி விட்டு அலரிமாளிகையில் இருந்து பலத்த பாதுகாப்புடன் வெளியேறி திருகோணமலை கடற்படை முகாமில் குடும்பத்தவர்களுடன் தஞ்சமடைய வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. பொதுஜன பெரமுன அரசியல் வாதிகள் பலரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ராஜபக்ஷக்களினால் சொந்த மாவட்டமான அம்பாந் தோட்டையில் உள்ள அவர்களின் பரம்பரைச் சொத்துக்களைக் கூட காப்பாற்ற முடியவில்லை.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்ட வந்த 'போர் நாயகன்' என்று துதிபாடப்பட்ட கோட்டாபய வன்முறைகளை கட்டுப்படுத்த முடியாமல் கையறுநிலையில் இருந்தார்.

எந்தவொரு ராஜபக்ஷவும் இல்லாத அரசாங்கம் ஒன்றுக்கு இவ்வளவு விரைவாக தலைமை தாங்க வேண்டிவரும் என்று அவர் நினைத்துப் பார்த்திருக்கவே மாட்டார். பலம் பொருந்திய - துணிவாற்றல் கொண்ட ஒரு ஆட்சியாளர் நாட்டுக்கு அவசியம் என்று வலியுறுத்தி சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் அதிகாரத்துக்கு கொண்டு வந்த ஒரு ஜனாதிபதி மிகவும் பலவீனமானவராக தன்னுடன் முரண்பட்ட முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவைக் கூட பிரதமராக பதவியேற்க வருமாறு கேட்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். இறுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக கோட்டாபய நியமிக்க வேண்டியேற்பட்டது.

மே9 மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகினார். ஜீன் 9 இன்னொரு சகோதரரும் நாட்டை இன்றைய வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்த சூத்திரதாரிகளில் ஒருவருமான முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகினார். ஜீலை9 கோட்டாபய மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்கமுடியாமல் ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறி இன்னமும் அடையாளம் தெரியவராத ஒரு இடத்தில் தங்கியிருக்கிறார். இலங்கை கடற்பரப்பில் கடற்படைக்கப்பல் ஒன்றில் அவர் இருப்பதாக அல்லது இராணுவ முகாம் ஒன்றில் இருப்பதாக செய்திகள் அடிபட்டன.



அயல் நாடொன்றுக்கு சென்றிருக்கும் ஜனாதிபதி இன்றைய தினம் நாடு திரும்புவார் என்று பி.பி.சி.க்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பின்னர் தான் அவ்வாறு தவறுதலாக கூறிவிட்டதாக மறுப்புக் கூறினார். பிரபலமான சர்வதேச ஊடகத்துக்கு அவ்வாறு கூறிவிட்டு பின்னர் அவர் பின்வாங்கிய தன் பின்னணியில் உள்ள சூட்சுமம் என்னவோ?

ஜீலை 9 இலங்கையின் அரசியல் வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டது. நாட்டின் நாலா பகுதிகளிலும் இருந்து தற்போதைய போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தலைநகர் கொழும்பில் திரண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள் ஜனாதிபதியை மாளிகையில் இருந்து வெளியேறச் செய்திருக்கிறார்கள்.

அவர் பதவி விலகுவதாக சபாநாயகர் மூலமாக நாட்டுக்கு அறிவித்தார். பதவி விலகல் கடிதத்தில் நேற்றைய தினம் ஜனாதிபதி கைச்சாத்திட்டதாகவும் அந்த கடிதம் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. எதிரணி அரசியல் கட்சிகள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என்று வெறுமனே கோரிக்கைகளை முன் வைத்தனவே தவிர, அதை நடைமுறையில் சாத்தியமாக்கியிருப்பது மக்கள் சக்தியேயாகும்.

ஜனாதிபதி மாளிகையும் ஜனாதிபதி செயலகமும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையும் இப்போது ஆட்சியாளர்களின் கைகளில் இல்லை.மக்கள் இன்று ஐந்தாவது நாளாக அவற்றை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அங்கெல்லாம் மக்கள் நடந்து கொள்கின்ற முறை அவர்கள் தங்கள் போராட்டத்தின் வெற்றி காரணமாக ஒரு பரவசத்தில் இருப்பதையே வெளிக்காட்டுகிறது.

69இலட்சம் மக்களின் ஆணை தனக்கு இருப்பதால் பதவி விலகவேண்டிய தேவை தனக்கு இல்லை என்றும் பதவிக் காலத்தின் எஞ்சிய இரு வருடங்களுக்கும் அதிகாரத்தில் இருக்கப் போவதாகவும் தோல்வி கண்ட ஒரு ஜனாதிபதியாக தான் விலகிச் செல்ல விரும்பவில்லை என்றும் கூறிக் கொண்டிருந்த கோட்டாபய மக்களின் கோரிக்கைக்கு இணங்க முன்கூட்டியே பதவியில் இருந்து விலகியிருந்தால் எஞ்சியிருந்த கௌரவமாவது மிஞ்சியிருக்கும். மக்களின் எதிர்ப்புக்கு பயந்து ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறிச் சென்ற இலங்கையின் முதல் ஆட்சியாளர் என்ற அபகீர்த்தியை இறுதியில் அவர் சம்பாதித்திருக்கும் பரிதாப நிலை. மக்கள் தேர்தல்களில் அரசியல்வாதிகளுக்கு வழங்கும் ஆணை ஒரு வழிப்பாதையல்ல. மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அக்கறையுடன் செயற்படுவதே அந்த ஆணைக்கு தாங்கள் தொடர்ந்தும் உரிமை கோருவதற்கான தகுதியை கொடுக்கும் என்பதை அரசியல்வாதிகள் பொதுவில் விளங்கிக்கொள்வதில்லை.


நாட்டை தனது சகோதரர்களுடன் சேர்ந்து வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்த ஜனாதிபதி கோட்டாபய தனக்கு இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஆணை வழங்கிய 69 இலட்சம் வாக்காளர்களும் எரிபொருட்கள் இல்லாமல் அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மருந்து வகைகள் இல்லாமல்' மின்சாரம் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கும் இலங்கையர்களுக்குள் தான் அடங்குகிறார்கள் என்பதை நிச்சயம் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இலங்கை மக்கள் இத்தகைய ஒரு மாபெரும் கிளர்ச்சியை முன்னெடுப்பார்கள் என்று அரசியல் வர்க்கத்தின் பெரும்பகுதி ஆரம்பத்தில் உண்மையில் எதிர்பார்க்கவில்லை. ஒரு தசாப்தத்துக்கு முன்னர் அரபு நாடுகளில் எதேச்சாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக மூண்ட மக்கள் கிளர்ச்சிகளை 'அரபு வசந்தம்' என்று அழைக்கிறார்கள்.


ஆனால், அந்த வசந்தத்தை எல்லாம் புரட்டிப் போடக் கூடியதாக இலங்கை மக்கள் தங்களுக்கென்று தனியான வசந்தத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருக்கிறார்கள். உலகின் வேறு பகுதிகளில் இடம் பெறக்கூடிய மக்கள் கிளர்ச்சிகளின் போது இனிமேல் 'கோட்டா கோ கம' போன்ற அரசியல் கிராமங்களை அந்த மக்கள் உருவாக்கக்கூடும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை இலங்கையில் அறிமுகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன தனக்கு இருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாதே தவிர, மற்றைய எல்லாவற்றையும் செய்யமுடியும் என்று கூறினார். இன்று அவரையும் விட கூடுதல் அதிகாரங்களை தன்வசம் வைத்திருந்த ஜனாதிபதியை மக்கள் சக்தி மாளிகையை விட்டு ஓட வைத்திருக்கிறது(22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் நிர்வாக திறமை பளிச்சிடும். எதிர்ப்புகள் குறையும். காரியதடை அகலும். இயந்திரங்கள் தீ ஆகிய வற்றில் கவனம் தேவை.





ரிஷபராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். அடுத்தவருக்கு உதவிகள் செய்யும் போது ஆலோசித்து செய்வது நல்லது.தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறி வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பொருளாதார நிலை உயரும். பணி உயர்வு சம்பந்தமான தேர்வுகளில் தேர்ச்சி பெறுவீர்கள்.





மிதுனராசி அன்பர்களே! பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும். வியாபாரம் லாபகரமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறமை அதிகரிக்கும்.





கடகராசி அன்பர்களே! செல்வ சேர்க்கை உண்டாகும். சுணங்கி கிடந்த காரியங்களில் வேகம் உண்டாகும். ஆன்மிக பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கும். வெளியூர் செல்ல நேரலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவர். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும்.





சிம்மராசி அன்பர்களே! மனதில் நிம்மதி உண்டாகும். உதவி என்று வருபவர்களுக்கு தயங்காமல் உதவிகளை செய்வீர்கள். ஆடைஆபரணம் வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு இடமாற்றம் கிடைக்கும். தந்தை வழியில் கருத்து பலன் தரும்.




கன்னிராசி அன்பர்களே! அறிவுத்திறன் அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. மனதை கட்டுப்படுத்தி கொள்வது நல்லது. சின்ன விஷயங்களில் மன நிறைவு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். வாக்கு வன்மையால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர் தொடர்பாக பயணங்கள் செல்ல நேரலாம். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது.





துலாம் ராசி அன்பர்களே! எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத்துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். சரக்குகளை கையாளும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.





விருச்சிகராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச்செலவுகள் இருக்கும். பணவரத்து திருப்தி தரும். தொழில், வியாபாரம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். உங்களது பேச்சு திறமையால் மேலிடத்தில் இருப்பவர்களிடம் நல்ல பெயர் பெறுவீர்கள்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெற்று, புதிய ஆர்டர்கள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலைபளு குறைந்து மகிழ்ச்சியுடன் காணப்படுவர். அலுவலகத்தில் இருந்த பிரச்னைகள் அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்.




மகரராசி அன்பர்களே! சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். வாகனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆக்கபூ ர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். தொழில் தொடர்பான பயணங்கள் செல்ல நேரிடலாம். பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பர்.




கும்பராசி அன்பர்களே! தேவையற்ற பிரச்னைகளில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். மனதில் உற்சாகம் உண்டாகும். பொருளாதார உயர்வு உண்டாகும். உத்யோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். மனநிம்மதி உண்டாகும்.




மீனராசி அன்பர்களே! காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். தொழில் வியாபாரத்தில் வேகம்அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். பொறுப்புக்களை அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# கோத்தாவின் வீழ்ச்சி!

(15ம் பக்கத் தொடர்ச்சி) ஒப்பிடுகையில் ஜீலை 9 வன்முறைகள் குறைவு. ஊடகவியலார்கள் தாக்கப்பட்டுள்ளார்கள். ரணிலின் வீடு எரிக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று மாதகாலப் போராட்டத்தின் முடிவில் ராஜபக்சக்கள் துரத்தப்பட்டுள்ளார்கள். கரு ஜெயசூரிய தெரிவித்திருப்பது போல அது மக்கள் எழுச்சிக்கு கிடைத்த ஒரு வெற்றி தான்.

ஆனால் அந்த மக்கள் எழுச்சி முழு நாட்டுக்கும் உரியது அல்ல. ஒன்பதாம் தேதி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட பொழுது முழு நாடும் கொழும்புக்கு என்று ஒரு கவர்ச்சியான சுலோகம் முன் வைக்கப்பட்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகத்தில் இருந்து 30-க்கும் குறையாதவர்கள் தான் சைக்கிளில் ஊர்வலம் போனார்கள்.

நகரப் பகுதியில் கிட்டத்தட்ட 100 பேர் தான் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினார்கள். கிழக்கிலும் நிலைமை அப்படித் தான். வடக்கு கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்திற்கு என்று போகவில்லை. தூரமும் போக்குவரத்து நெருக்கடியும் காரணங்களாக கூறப்படலாம். யாழ்ப்பாணத்தில் மேற்படி போராட்டத்திற்கு ஆதரவைத் தெரிவித்த கட்சிகள் பெருமளவுக்கு இடதுசாரி பாரம்பரியத்தில் வந்தவை. தமிழ்த் தேசிய நிலைபாட்டைக் கொண்ட காட்சிகள் இதில் இணையவில்லை. ஆர்ப்பாட்டங்களுக்கு வடக்கு கிழக்கில் பெருந்திரளான ஆதரவு கிடைக்கவில்லை.

இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் முன்னப்பொழுதும் பெற்றிராத ஒரு மகத்தான வெற்றியை பொது மக்கள் பெற்றிருக்கிறார்கள்.அந்த வெற்றிக்காக நாடு முழுவதையும் கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்கள். ஆனால் வடக்கு கிழக்கில் இருந்து பெருந்தொகையானவர்கள் கொழும்புக்குப் போகவில்லை. இது எதைக் காட்டுகிறது? இலங்கைத்தீவு இப்பொழுதும் இப்பொழுதும் இரண்டாகப் பிரிந்து நிற்கிறது என்பதைத்தானே? இலங்கைத் தீவில் இப்பொழுதும் இரு வேறு கருத்து நிலைகளைக் கொண்ட மக்கள் கூட்டங்கள் வசிக்கின்றன என்பதைத் தானே?

# ராஜபக்ஷாக்களின் வீழ்ச்சியின்....

(21ம் பக்கத் தொடர்ச்சி) என்பதை நேரில் காண அவர் உயிருடன் இல்லை. மக்களின் எழுச்சியின் முன்னால் எந்த அதிகாரமும் நிலைத்து நிற்கமுடியாது. ராஜபக்ஷக்களின் தவறுகள் பற்றி பேசுவதற்கு முன்னால் பலரும் முன்னுக்கும் பின்னுக்கும் பார்த்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் இன்று அதே ராஜபக்ஷக்களை வெளியில் காணமுடியவில்லை. கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு வெளிநாடு செல்வதற்கு விமான நிலையம் சென்ற ஒரு ராஜபக்ச பயணிகளின் ஆர்ப்பாட்டம் மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் ஆட்சேபம் காரணமாக திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியில் இருந்து பல அரசியல் பாடங்களை கற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகங்கள் குடும்ப ஆதிக்க அரசியல் போன்ற தீய போக்குகளுக்கு இடமளிக்காத ஒரு புதிய அரசியல் கலாசாரத்தையே மக்கள் எதிர்பார்கிறார்கள்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதிராக போராட்டக் களங்களில் எழுப்பப்படுகின்ற முழக்கங்கள் இன்றைய அரசியல் வர்க்கம் முழுமையின் மீதும் மக்களுக்கு இருக்கின்ற வெறுப்பை பிரகாசமாக வெளிக்காட்டுகிறது.முறைமை மாற்றத்தை வேண்டி நிற்கும் மக்களின் போராட்டங்களை திசை திருப்புவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. அரபு வசந்தம் இடம்பெற்ற நாடுகளில் அந்த மக்கள் கிளர்ச்சிகளினால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் மறுதலையாக்கப்பட்ட நிலைவரமே பெரும்பாலும் இன்று காணப்படுகிறது.

மக்கள் எதிர் நோக்குகின்ற உண்மையான பிரச்சினைகளில் இருந்து அவர்களின் கவனத்தை திசைதிருப்பிவைத்திருப்பதற்கு ராஜபக்ஷக்கள் போர் வெற்றியை தாராளமாக பயன்படுத்தினார்கள். தங்களது தவறான ஆட்சியையும் பொதுச்சொத்து சூ றையாடல்களையும் மூடி மறைப்பதற்கு அவர்கள் சமூகங்களை பிளவுபடுத்துகின்ற அணுகுமுறைகளையும் செயற்பாடுகளையும் இடையறாது தீவிரமாக முன்னெடுத்தார்கள்.

முன்னைய ஆட்சியாளர்களும் சிங்கள பௌத்த கேடயத்தை தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தினார்கள் என்றபோதிலும் ராஜபக்சாக்களின் ஆட்சியில் அது உச்சபட்சத்துக்கு போனது. ராஜபக்ஷக்களின் வீழ்ச்சியை சிங்கள பௌத்த பேரினவாத அரசியலின் தோல்வியாகவும் நிச்சயம் பார்க்கவேண்டும்.

சிங்கள மக்களை பேரினவாத அரசியல் சகதிக்குள் அமிழ்த்தி வைத்திருந்தவர்கள் இன்று முழு நாட்டு மக்களையும் அத்தியாவசிய பண்டங்களைத் தேடி வீதிகளில் அலையவிட்டிருக்கிறார்கள். கிடைக்காத எரிபொருட்களுக்காக வரிசைகளில் காத்து நின்ற பலர் மரணமடைந்திருக்கிறார்கள். அடுத்தநாளை எப்படி சமாளிக்கப் போகின்றோம் என்று மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். பல தாய்மார் பிள்ளைகளுக்கு ஒருவேளை உண்ணக்கொடுக்க முடியாத அவலத்தில் அவர்களை ஆற்றில் தள்ளிவிட்டு தாங்களும் தற்கொலைக்கு முயற்சித்த பல சம்பவங்கள் பற்றி செய்திகள் வருகின்றன.

சிங்கள பௌத்த தேசியவாதத்தையும் தேசிய பாதுகாப்பையும் முன்னிறுத்தி ராஜபக்ஷக்களை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவருவதில் தீவிர பங்களிப்புச் செய்த சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிச்சத்தைக் கண்டு ஓடி மறையும் கரப்பான் பூச்சிகள் போன்று பதுங்கியிருக்கிறார்கள்.

அதனால், சகல சமூகங்களையும் ஒரு சேரப் பாதிக்கின்ற பிரச்சினைகளில் இருந்து கவனத்தை திசை திருப்புவதற்கும் தவறான ஆட்சியை மூடி மறைப்பதற்கும் இனிமேலும் பெரும்பான்மையினவாத அணி திரட்டல்களுக்கு இடமளிக்கக்கூடாது. தற்போதைய மக்கள் கிளர்ச்சியின் விளைவாக தோன்றக்கூடிய பதிய அரசியல் சக்திகள் பெரும்பான்மையினவாத அரசியலின் இதுவரையான தீயவிளைவுகளை அடையாளம் கண்டு அதற்கு மீண்டும் இடங்கொடுக்காத வகையில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்க முன்வராவிட்டால், இந்த வரலாற்று முக்கியத்துவ கிளர்ச்சியின் பயன்கள் வீணாகிப் போகும்.

பெரும்பான்மையின ஜனநாயக நாடுகளில் தெரிவுசெய்யப்படுகின்ற தலைவர்கள் மக்களைப் பிளவுபடுத்தி சமூகத்தை துருவமயப்படுத்தும் அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகள் மூலம் மாத்திரம் இனிமேலும் தங்களை பலப்படுத்துவது சாத்தியமில்லை என்பதும் இன்றைய எமது நெருக்கடி உணர்த்துகின்ற இன்னொரு பாடமாகும்.


கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம் பெருமையுடன் வழங்கும்
இவ்வாண்டின்
மாபெரும் இன்னிசை நிகழ்ச்சி
அனுமதி இலவசம்
FREE ADMISSION
JOYTHI
Blazing Minds
2022
Super Singer Balaji
Super Singer Vanathi
Super Singer Abarna
POWERED BY
ANANTH THARMALINGAM
RAJESH LINGANATHAN
416-939-9525
THE REMAX Guys
RE/MAX COMMUNITY
RAISING YOUR VALUE
PLATINUM SPONSOR
RhynoCare
TAKE CHARGE OF YOUR HEALTH
416 830 8181
SILVER SPONSOR
Niuniu's ROOFING INC.
www.niuniuroofing.ca
647-567-8564
Mega Tuners
GRAND MUSICAL EVENT
WITH CANADIAN SINGERS & SUPER SINGERS
JULY 30 - 31 ALL DAY EVENT
Canada Sri Ayyappan Temple
635 Middlefield Road, Scarborough, ONTARIO. M1V 5B8
FOR ADD AND VENDORS PLEASE CONTACT : 416-321-6104, 416-321-7558

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HomeLife HIGHER STANDARDS



**Ravi. Paramu**
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

**RANJANI THIRUKESWARAN LAW OFFICE**



- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242



Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி

**NON-MEDICAL INSURANCE**

நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!



**ARUN KULASINGAM**
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

KABIS
KABIS & ASSOCIATES INC.

- Life Insurance
- Critical Illness
- Disability
- RESP
- RRSP
- Mortgage Protection Insurance
- Travel Insurance (Super Visa)

Foresters INDUSTRIAL ALLIANCE Assumption Life



OVER 10 YEARS EXPERIENCE
**RAVI VEERASINGAM B.A**
Sales Representative
416-356-8958

BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE HIGHER STANDARDS

**ARVIN-KING**
RABINTHIRARAJ
Broker
416-200-7001



TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*



RENOWNED FOR
**AUTHENTIC KANCHIPURAM**
SILK SAREES


$599* FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

**அபாயம் உண்மையாகலாம்.**

சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.



புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?

| In Canada | |
| --- | --- |
| Breast Cancer | 1 woman in 8 |
| Prostate Cancer | 1 man in 7 |
| Heart disease | 1 person in 4 |
| Stroke (CVA) | 1 person in 20 |

Fortunately, more people are surviving these afflictions and living longer lives.

| Survival Rate | |
| --- | --- |
| Cancer | 60% |
| Heart Attack | 85% |
| Stroke | 1 person in 4 |

Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.

- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years

BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%

Industry critical illness claim breakdown[3]




iA Financial Group

**AJITH SABARATNAM**
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.

